بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 11

இதழ் 41

# பதர்

வாரா இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1448 - ரபீயுஸ் ஸானீ 19

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - அகா 08 ★ 08 அக்டோபர் 2026


## அல்லாஹ்வின் கட்டளை

وَلۡتَکُنۡ مِّنۡکُمۡ اُمَّۃٌ یَّدۡعُوۡنَ اِلَی الۡخَیۡرِ وَیَاۡمُرُوۡنَ بِالۡمَعۡرُوۡفِ وَیَنۡهَوۡنَ عَنِ الۡمُنۡکَرِ ؕ وَاُولٰٓئِکَ ہُمُ الۡمُفۡلِحُوۡنَ

**நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர்.**

(3: 105)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நபிமொழி

### எவர் நேர்வழியின் பக்கம் அழைக்கிறாரோ அவருக்கான நற்கூலி நேர்வழியைப் பின்பற்றுபவருக்கான நற்கூலியைப் போன்றதாகவே இருக்கும்

عَنۡ حُذَیۡفَۃَ بۡنِ الۡیَمَانِ، عَنِ النَّبِیِّ صَلَّی اللّٰہُ عَلَیۡہِ وَسَلَّمَ قَالَ وَالَّذِیۡ نَفۡسِیۡ بِیَدِہٖ لَتَاۡمُرُنَّ بِالۡمَعۡرُوۡفِ، وَلَتَنۡهَوُنَّ عَنِ الۡمُنۡکَرِ، اَوۡ لَیُوۡشِکَنَّ اللّٰہُ اَنۡ یَّبۡعَثَ عَلَیۡکُمۡ عِقَابًا مِّنۡہُ، ثُمَّ تَدۡعُوۡنَہٗ فَلَا یُسۡتَجَابُ لَکُمۡ۔ ( کتاب الفتن باب الامر بالمعروف والنھی عن المنکر 2169)

(திர்மிதி, கிதாபுல் ஃபிதன், பாபுல் அம்ரி பில் மஃரூஃபி வந்நஹ்யி அனில் முன்கர் - ஹதீஸ்: 2169)

ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'என் உயிர் எவனது வல்லமையின் கட்டுப்பாட்டில் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக! நீங்கள் நன்மையை ஏவ வேண்டும்; தீமையைத் தடுக்க வேண்டும். இல்லையெனில், அல்லாஹ் கடும் தண்டனையை உங்கள் மீது இறக்கக் கூடும். பின்னர் நீங்கள் அவனிடம் துஆ செய்வீர்கள்; ஆனால் அது ஏற்றுக் கொள்ளப்படாது.'

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் நேர்வழியின் பக்கம் (மக்களை) அழைக்கிறாரோ, அவருக்கான நற்கூலி நேர்வழியைப் பின்பற்றுபவர்களுக்கான நற்கூலியைப் போன்றதாகவே இருக்கும். இதனால் அவர்களின் நற்கூலியில் எதுவும் குறைந்துவிடாது. மேலும் எவர் வழிகேட்டின் பக்கம் அழைக்கிறாரோ, அவர் மீது அதனைப் பின்பற்றுபவர்களுக்கு எவ்வளவு பாவம் இருக்குமோ அதே அளவிலான பாவமே சேரும். இந்த விஷயம் அவர்களின் பாவங்களிலும் எதையும் குறைத்து விடாது.'(ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல் இல்ம் - ஹதீஸ்: 6804)

* * * * * * * * * * *

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்

### ஜல்சா ஸாலானாவில் இறை கூற்றுகளைக் கேட்பதற்காகவும் துஆவில் பங்கேற்பதற்காகவும் மட்டுமே வர வேண்டும்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'உலகியல் திருவிழாக்களைப் போல வழக்கத்திற்காக நடப்பது அல்ல இந்த ஜல்ஸா ; மாறாக இதனை நடத்துவது தூய்மையான எண்ணம் மற்றும் அழகிய கனிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.' (மஜ்மூஆ இஷ்திஹாராத், தொகுதி 1, பக்கம் 430)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

'...எனவே, முடிந்த வரை அனைத்து நண்பர்களும் இறை கூற்றுகளைக் கேட்பதற்காகவும், துஆவில் பங்கேற்பதற்காகவும் இந்தத் தேதியில் வந்து விட வேண்டும். ஈமானையும், உறுதியையும், இறைஞானத்தையும் அதிகரிக்கச் செய்யும் உண்மைகளையும், ஞானங்களையும் எடுத்துரைக்கின்ற பணி இந்த ஜல்ஸாவில் நிகழும். மேலும் அந்த நண்பர்களுக்காக சிறப்பு துஆக்கள் மற்றும் சிறப்புக் கவனம் இருக்கும்.மேலும், முடிந்தவரை மாபெரும் கருணையாளனின் சமூகத்தில் செய்யப்படும் உருக்கமான முயற்சிகள் காரணமாக இறைவன் அவர்களைத் தன் பக்கம் ஈர்த்து, மேலும் தனக்காக அவர்களை ஒப்புக் கொள்ள வேண்டும். மேலும், அவர்களிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு புதிய ஆண்டும் எந்த அளவு புதிய சகோதரர்கள் இந்த ஜமாஅத்தில் நுழைவார்களோ அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட இந்த தேதிகளில் தமக்கு முந்தைய சகோதரர்களைக் கண்டு கொள்வர்; மேலும் ஒருவரையொருவர் அடையாளம் கண்டு கொண்டு பரஸ்பர அன்பு மற்றும் தொடர்பு முன்னேற்றம் அடைந்து கொண்டே இருக்கும். இது இந்த ஜல்ஸாக்களின் மூலம் கிடைக்கும் ஒரு தற்காலிக பயனாகும்....... மேலும், இந்த ஆன்மிக ஜல்ஸாவில் இன்னும் ஏராளமான ஆன்மிக பலன்களும், நன்மைகளும் கிடைக்கும். அவை இன்ஷா அல்லாஹுல் கதீர் அவ்வப்போது வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும்.' (மஜ்மூஆ இஷ்திஹாராத், தொகுதி 1, பக்கம் 303, 304- ஆஸ்மானீ ஃபைஸலா, டிசம்பர் 30, 1891)

அன்னார் (அலை) தொடர்ந்து கூறுகின்றார்கள்:

இது உலகத் திருவிழாக்களில் ஒரு திருவிழா அல்ல.'

(மஜ்மூஆ இஷ்திஹாராத், தொகுதி 1, பக்கம் 334)

* * * * * * * * * * *

## முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் பொன்மொழிகள்

### ஜல்சா ஸாலானா அல்லாஹ்வின் அடையாளங்களில் ஓர் அடையாளமாகும்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

'நான் முன்னரும் பலமுறை எடுத்துரைத்தது போன்று, இந்த ஜல்ஸா அல்லாஹ்வின் சான்றுகளில் ஒரு சான்றாகும். காதியான் எத்தகைய ஓர் இடமாகும் என்றால், ஒரு காலத்தில் இதன் பக்கம் எவரும் எட்டிக் கூட பார்க்கவில்லை. பல மக்கள் எத்தகையவர்களாக இருந்தனர் என்றால், அவர்கள் காதியான் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயரைக் கேட்ட உடன் தொலை தூரத்திலிருந்து காதியான் சென்றடையும் ஆசையுடன் புறப்பட்டு வந்தனர். ஆனால், பட்டாலா அல்லது அமிர்தஸரஸ் வந்தடைந்து திரும்பிச் சென்று விட்டனர். ஏனெனில், காதியானில் மிகப் பெரிய தஜ்ஜாலிய ஃபித்னா உள்ளது என்று அவர்களிடம் கூறப்பட்டு வந்தது. இன்றும் நமது ஜமாஅத்தில் ஏராளமான மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் காலத்திலேயே நாம் ஏன் காதியான் வரவில்லை என்று தங்களது கைகளை பிசைகின்றனர். ஏனெனில், எதிரிகள் அவர்களிடம் எத்தகைய விஷயங்களை கூறினர் என்றால், அவற்றைக் கேட்ட பிறகு அவர்கள் காதியான் செல்வதை விரும்பவில்லை. எனவே அவர்கள் பட்டாலா அல்லது அமிர்தசரஸ் வந்தடைந்து திரும்பிச் சென்று விட்டனர். அவர்கள் அந்த நேரத்தில்

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்....

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜல்ஸா ஸாலானா காதியானின் தயாரிப்பிற்கான நேரம் தொடங்கிவிட்டது

வாசகர்கள் அறிந்தபடி, இந்த ஆண்டு ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் அமீருல் முஃமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஒப்புதலுடன் காதியான் தாருல் அமானில் 131-வது ஜல்ஸா ஸாலானா வருகிற டிசம்பர் மாதம் 25, 26, 27 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது. இந்த மாநாடு நடைபெற இனி 3 மாதங்கள் மட்டுமே மீதமிருக்கின்றன. இந்த வகையில், ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கான தயாரிப்புகளை தொடங்குவதற்கான நேரம் தற்போது வந்துவிட்டது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் 1891-ல் இந்த ஜல்ஸாவிற்கு அடித்தளமிட்டபோது,இந்த ஜல்ஸாவை பைஅத்தின் அடிப்படை நோக்கங்களை முழுமைப்படுத்துவதற்கான வழிமுறையாக ஆக்கியிருந்தார்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்:

(1) ஜல்ஸா நடத்துவதன் நோக்கம் பைஅத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக:

இந்த எளியவனின் பைஅத்தில் இணைந்துள்ள அனைத்து தூய மனம் படைத்தவர்களும் அறிந்து கொள்ளட்டும்! உலக நேசம் தணிய வேண்டும் ; மேலும், தமது கருணை மிக்க எஜமானனாகிய இறைவன் மற்றும் கண்ணிய மிக்க தூதரின் மீதான அன்பும் உள்ளத்தில் மேலோங்க வேண்டும் என்பதும்; மேலும், எந்த நிலையினால் மறுமைப் பயணம் வெறுக்கத் தக்கதாக தெரிகிறதோ அந்த நிலை துண்டிக்கப்பட வேண்டும் என்பதும் பைஅத் செய்வதன் நோக்கமாகும்.

ஆனால், இந்த நோக்கத்தை அடைவதற்கு தோழமையில் தங்கியிருப்பதும், தமது வாழ்நாளின் ஒரு குறிப்பிட்ட காலத்தை இந்த வழியில் செலவிடுவதும் அவசியமாகும். இதன் மூலம் இறைவன் நாடினால் உறுதியான சான்றை கண்கூடாக கண்டு பலவீனம், இயலாமை மற்றும் சோம்பல் நீங்கிவிடும். மேலும் முழுமையான உறுதி பிறந்து ஆர்வமும், துடிப்பும், அன்பின் உத்வேகமும் உருவாகி விடும். எனவே இறைவன் இந்த நற்பேறை வழங்க வேண்டும் என்ற இந்த விஷயத்திற்காக எப்போதும் கவலை கொள்ள வேண்டும். மேலும் துஆ செய்ய வேண்டும். இந்த நற்பேறு கிடைக்கும் வரை அவ்வப்போது கண்டிப்பாக சந்திக்க வேண்டும். ஏனெனில் இயக்கத்தின் பைஅத்தில் இணைந்த பிறகு சந்திப்பிற்கு முக்கியத்துவம் வழங்கவில்லையென்றால் பின்னர் அதுபோன்ற பைஅத் முற்றிலும் அருளற்றதாகவும், வெறும் ஒரு சம்பிரதாயமானதாகவும் இருக்கும். ஒவ்வொருவருக்கும் பலவீனமான இயல்பு அல்லது ஆற்றல் குறைபாடு அல்லது பயணத் தொலைவு ஆகியவற்றின் காரணமாக அவர் தோழமையில் வந்து தங்குவதற்கோ அல்லது வருடத்தில் சிலமுறை துன்பங்களை எதிர்கொண்டு சந்திக்க வருவதற்கோ வாய்ப்பு அமைவதில்லை. ஏனெனில், பெரும்பாலான உள்ளங்களில் இன்னமும் சந்திப்பிற்காக பெரும் பெரும் துன்பங்களையும், பெரும் பெரும் சிக்கல்களையும் சுயமே சகித்துக் கொள்கின்ற அளவிலான உத்வேக மிகுதி இல்லை. எனவே ஆண்டில் மூன்று நாட்கள் ஜல்ஸாவுக்காக நிர்ணயிக்கப்படுவது பயனுள்ளதாகும். உடல் ஆரோக்கியமும், வாய்ப்பும் அமையப் பெற்றால் அனைத்து தூய உள்ளங்களும் கடுமையான தடைகள் ஏதும் இல்லாத பட்சத்தில் நிர்ணயிகக்கப்பட்ட அந்த தேதிகளில் வர வேண்டும்.

(2) ஜல்ஸாவின் நோக்கம், இறைக் கூற்றுகளைக் கேட்பது மற்றும் காலத்தின் இமாமின் துஆவை பெறுவது:

மேலும், ஜல்ஸாவின் நோக்கங்களைக் குறிப்பிட்டவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இறைக் கூற்றுகளைக் கேட்பதற்காகவும், துஆக்களில் பங்கேற்பதற்காகவும் மட்டுமே அனைத்து தோழர்களும் இயன்ற வரை இந்தத் தேதியில் வர வேண்டும். இந்த ஜல்ஸாவில் ஈமான் மற்றும் நம்பிக்கையை அதிகரிப்பதற்கு அவசியமான உண்மைகளையும், ஞானங்களையும் எடுத்துரைக்கும் பணி நிகழும். மேலும், அந்த தோழர்களுக்காக துஆவும், சிறப்பு கவனமும் இருக்கும்.

3) புதிய சகோதரர்களைச் சந்தித்தல்:

அதே போன்று அன்னார் (அலை) கூறினார்கள்:

இந்த ஜல்ஸாக்களினால் ஒரு தற்காலிகப் பயன் இதுவும் ஆகும். அதாவது ஒவ்வொரு புதிய ஆண்டிலும், எந்த அளவு புதிய சகோதரர்கள் இந்த ஜமாஅத்தில் இணைவார்களோ அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட தேதிகளில், வருகை தந்து தங்களுக்கு முன் இணைந்த தங்களது சகோதரர்களை கண்டு கொள்வார்கள். மேலும் அறிமுகம் ஏற்பட்டு பரஸ்பர அன்பும், தொடர்பும் அதிகரித்துக் கொண்டிருக்கும்.

(4) மரணித்து விடக் கூடிய சகோதரர்களுக்காக துஆ:

இந்த ஜல்ஸாக்களினால் விளையும் ஒரு தற்காலிக பயன் இதுவும் ஆகும். அதாவது 'இந்த இடைப்பட்ட காலத்தில் எந்த சகோதரரர் இந்த அழியும் (தற்காலிக) தங்குமிடத்தை விட்டு மறைந்து விடுகிறாரோ (அதாவது மரணித்து விடுகிறாரோ) இந்த ஜல்ஸாவில் அந்த சகோதரருக்காக பாவமன்னிப்பிற்கான துஆ செய்யப்படும்.'

**ஜல்ஸாவின் மகத்துவமும் முக்கியத்துவமும்**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இந்த மாநாட்டின் நோக்கங்களாக எதனை எடுத்துரைத்துள்ளார்களோ அதிலிருந்து இதில் கலந்து கொள்வதன் முக்கியத்துவம் மிகவும் அதிகரித்து விடுகிறது.

ஆக, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இந்த ஜல்ஸாவை சாதாரண ஜல்ஸாக்களைப் போன்று கருத வேண்டாம். இது எத்தகைய விவகாரம் என்றால், உண்மைக்கான ஆதரவு மற்றும் இஸ்லாமிய கலிமாவை மேலோங்கச் செய்தல் போன்றவை இதன் அடித்தளமாக அமைந்துள்ளது. இதற்கான அடிக்கல்லை இறைவன் தனது கரத்தால் வைத்துள்ளான்.மேலும், இதற்காக சமுதாயங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. அவை விரைவில் இதில் வந்து சேரும். ஏனெனில், இது எத்தகைய வல்லமை மிக்க இறைவனின் செயல் என்றால், அவனுக்கு முன்னால் அசாத்தியமான விஷயம் என்று எதுவும் கிடையாது.

இந்த சந்தர்ப்பத்தில் இந்த விஷயம் நினைவில் கொள்ளத் தக்கதாகும். அதாவது ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இறைக் கட்டளைக்கேற்ப எந்த ஆண்டு தம்மை மஸீஹ் மவ்வூத் என்று வாதம் செய்தார்களோ அப்போது இந்த ஜல்ஸாவை தொடங்கினார்கள். நாட்டின் தொலை தூரப் பகுதிகளில் கடுமையான எதிர்ப்பு எனும் சூறாவளி வீசிக் கொண்டிருந்தது. இந்தியாவின் பல்வேறுதரப்பட்ட சிந்தனைகளைக் கொண்ட பெரும் பெரும் மவ்லவிமார்கள் அன்னார் (அலை) மீது குஃப்ர் ஃபத்வா வழங்கிக் கொண்டிருந்தனர். அன்னார் (அலை) இஸ்லாத்தின் வட்டத்திலிருந்து வெளியேறி விட்டதாக ஃபத்வா வழங்கிக் கொண்டிருந்தனர். முஸ்லிம்களின் நடைமுறையில் இருந்த,மஸீஹ் உயிருடன் இருக்கின்றார் என்ற கொள்கைக்கு முற்றிலும் நேரெதிரான வாதத்தை அன்னார் (அலை) செய்திருந்த அத்தகைய நிலைமைகளில் அன்னார் (அலை) ஜல்ஸாவை தொடங்கியிருந்தார்கள். மேலும் அந்த காலகட்டத்தில் மக்கள் காதியானில் ஒன்றுகூட மாட்டார்கள் என்றே வெளிப்படையில் தோன்றிக் கொண்டிருந்தது. கடுமையான எதிர்ப்பு மற்றும் தடைகளுக்கு மத்தியிலும் 1891-ல் காதியானில் மஸ்ஜித் அக்ஸாவில் நடந்த முதல் ஜல்ஸாவில் 75 பேர் கலந்து கொண்டனர். இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்ட நற்பேறு பெற்ற ஸஹாபிகளின் பட்டியலை ஹுஸுர் (அலை) அவர்கள் ஆஸ்மானீ ஃபைஸலா என்ற தமது நூலில் பதிந்துள்ளார்கள். அடுத்து, கடுமையான எதிர்ப்புகள், தடைகள், தொல்லைகள் மற்றும் பள்ளிவாசல்களிலிருந்து தள்ளிவிடப்பட்டு வெளியேற்றப்படுதல் போன்ற நிகழ்வுகளுக்கு மத்தியிலும் 1892-ம் ஆண்டு நிகழ்ந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டோரின் எண்ணிக்கை ஐநூறாக இருந்தது.அவர்களில் காதியானுக்கு வெளியில் இருந்தும், தொலை தூரத்திலிருந்தும் வருகை தந்தவர்களின் எண்ணிக்கை 325- ஆக இருந்தது. இந்தப் பட்டியலை ஹுஸுர் (அலை) அவர்கள் ஆயினா கமாலாத்தே இஸ்லாம் என்ற ஞானம் மிக்க நூலிலும் பதிந்துள்ளார்கள். எதிர்ப்புகளின் சூறாவளிக்கு மத்தியில் கடந்து கொண்டிருந்த இந்தக் கப்பல் எந்த அளவு வெற்றிக்கரமாக பயணித்துக் கொண்டிருந்தது என்பது இதிலிருந்து தெரிய வருகின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மரணம் 1908-ம் ஆண்டு நிகழ்ந்தது. அதற்கு முன்பு அன்னாரின் பரிசுத்தமான வாழ்வின் இறுதி ஆண்டு நடைபெற்ற ஜல்ஸாவில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரமாக இருந்தது. ஒவ்வோர் ஆண்டும் எவ்வாறு அல்லாஹ் தஆலா இந்த இயக்கத்திற்கு முன்னேற்றத்தை வழங்கிக் கொண்டிருந்தான் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. 1908-ம் ஆண்டு அஹ்மதிய்யா கிலாஃபத்தின் முதலாவது ஜல்ஸா ஸாலானா ஆண்டாக இருந்தது. அதில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை மூன்றாயிரமாக இருந்தது. எதிரிகள் குஃப்ர் ஃபத்வா வழங்கியதாலும், மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மரணத்தின் காரணமாகவும், இந்த இயக்கம் அழிந்துபோய் விடும் என்று கருதி வந்தனர். ஆனால், அல்லாஹ் ஒரே ஆண்டில் இறைவனுக்கான இந்த ஜல்ஸாவில் வருகை தருவோரின் எண்ணிக்கையில் ஓராயிரம் எண்ணிக்கையை கூடுதலாக ஆக்கிவிட்டான். இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலகட்டத்தின் முதல் ஆண்டான 1914-ம் ஆண்டில் ஜல்ஸாவில் கலந்து கொண்டோரின் எண்ணிக்கை ஆறாயிரமாக இருந்தது. மேலும், 1964-ல் ரப்வாவில் நடைபெற்ற இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலகட்டத்தின் கடைசி ஜல்ஸாவில் 1 லட்சத்திற்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர். (அல்ஃபஸ்ல், டிசம்பர் 24, 1965) இரண்டாவது

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்....

# ஜுமுஆ பேருரை

## நன்றியுணர்வு தொடர்பான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூய செயல் முன்மாதிரிகள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 21 ஆகஸ்ட் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **ஸஹுர் மாதம் 21 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۞ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ۞ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۞

مٰلِكِ يَوْمِ الدِّينِ ۞ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ۞ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ۞

صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ۞

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்தளவுக்கு ஆழமாகத் தமது தோழர்களுக்கு நன்றியுணர்வின் பக்கம் கவனமூட்டினார்கள் என்பது குறித்து ஹஸ்ரத் பீர் ஸிராஜுல் ஹக் ஸாஹிப் நுஃமானி (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிக்கிறார்கள்:

'ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒருமுறை என்னிடம், இன்று உமக்கும் மீரான் பக்ஷ் சவ்தாயி என்பவருக்கும் இடையே என்ன சர்ச்சை நடந்து கொண்டிருந்தது? என்று கேட்டார்கள்.'

அங்கு மனநிலை குறைபாடுள்ள ஒரு நபர் இருந்தார்; பீர் சாஹிப் அவரிடம் ஏதோ விவாதம் செய்திருக்க வேண்டும்.

பீர் ஸாஹிப் (ரலி) கூறுகிறார்கள்:

'ஹுஸுர் (அலை) அவர்கள் என்ன சொல்வார்களோ என்று நான் பயந்துபோனேன். ஏனெனில், நாங்கள் பேசிய அனைத்தையும் அவர்கள் கேட்டிருப்பார்கள். நான் பயந்துகொண்டே நடந்த அனைத்தையும் கூறினேன்.'

அதற்கு,அன்னார் (அலை) கூறினார்கள்:

'சவ்தாயி, புத்திசுவாதீனமற்ற, பொறுப்பு வழங்கப்படாத நிலையைச் சேர்ந்தவர் ஆவார். அதாவது, எவருக்குச் சிந்தனை திறனே இருக்காதோ, எவர் மீது ஷரீஅத்தின்படி நன்மைகளும் தீமைகளும் எழுதப்படுவதில்லையோ, எவருடைய பாவத்திற்காக எவ்விதப் பிடியும் இல்லையோ அத்தகைய மனிதர் ஆவார். இத்தகைய நிலையில் உள்ள மனிதர்கள் எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும் அவர்கள் மீது எந்தவொரு பிடியும் இல்லை. அவர்களிடம் சிந்தனையே இல்லாதபோது, பிடி எவ்வாறு இருக்கும்? புத்திக்கூர்மை உடையவர் மீது தானே பிடி இருக்கும்.'

தொடர்ந்து அன்னார் (அலை) கூறும்போது, 'உலக மக்கள் இத்தகையவர்களை இறை அன்பில் ஆழ்ந்தவர் என்றும், இறைநேசர் என்றும், இறைப்பணியில் உள்ளவர் என்றும் அழைக்கிறார்கள். ஆனால் உலகம் கூறுவது தவறாகும். உண்மையில் இவர்கள் இறை அன்பில் ஆழ்ந்தவர்களோ, இறைநேசர்களோ அல்ல; மாறாக இவர்கள் இழப்பிற்கு ஆளானவர்கள். அதாவது, இறைவனின் அனைத்து அருட்கொடைகளிலிருந்தும் இழப்பிற்கு ஆளானவர்கள் ஆவர். பகுத்தறிவு, சிந்திக்கும் திறன், ஆடை, உணவு பானங்களின் சுவை, மனைவி மக்கள் மற்றும் அவர்களைப் பராமரிப்பதால் கிடைக்கும் அருட்கொடைகள் மற்றும் நன்மைகளிலிருந்து அவர்கள் இழப்பிற்கு ஆளானவர்கள் ஆவர். அல்லாஹ்வைப் பற்றிய அறிவிலிருந்தும் புரிதலிலிருந்தும் இழப்பிற்கு ஆளானவர்கள் ஆவர். அல்லாஹ்வின் இருப்பு மற்றும் பண்புகளின் ஞானத்திலிருந்தும் இழப்பிற்கு ஆளானவர்கள் ஆவர். ரஸுல் மற்றும் நபியின் கண்ணியத்திலிருந்தும், அவர்களைப் பின்பற்றுவதிலிருந்தும் இழப்பிற்கு ஆளானவர்கள் ஆவர். திருக்குர்ஆனைத் திலாவத் செய்வதிலிருந்தும், அதன் பொருள், இரகசியங்கள், ஞானங்கள் மற்றும் நுட்பங்களிலிருந்தும் இழப்பிற்கு ஆளானவர்கள் ஆவர். ஷரீஅத் மற்றும் ஆன்மிக வழியிலிருந்தும் இழப்பிற்கு ஆளானவர்கள் ஆவர்.மேலும், நம்பிக்கை கொண்டோரின் ஆன்மிக முன்னேற்றமாக திகழும் தொழுகை, அல்லாஹ்வே கூலியாக கிடைக்கும் நோன்பு, ஹஜ் செய்யும் முறைகள், ஸகாத் மற்றும் அவற்றைப் பேணுவதால் கிடைக்கும் நன்மைகள் மற்றும் பதவிகளிலிருந்தும் இவர்கள் இழப்பிற்கு ஆளானவர்கள் ஆவர்.

எனவே, இத்தகைய மனிதர்களைக் காணும்போது அவர்களுடன் விவாதிப்பதையோ அல்லது சண்டையிடுவதையோ விடுத்து, 'அல்லாஹ் நம்மை இத்தகைய அருட்கொடைகளினாலும் நன்மைகளினாலும் பயனடையச் செய்துள்ளானே தவிர, நம்மை இழப்பிற்கு ஆளானவர்கள் ஆக்கவில்லையே' என்று இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்றார்கள்.

அவன் நமக்குச் சிந்திக்கும் திறனையும், பகுத்தறிவையும் வழங்கி, திருக்குர்ஆனை திலாவத் செய்வதற்கும், அதன் ஞானங்கள், இரகசியங்கள் மற்றும் நுட்பங்களைப் புரிந்துகொள்வதற்கும் வாய்ப்பளித்துள்ளான். ஹலால் மற்றும் ஹராம் ஆகியவற்றை வேறுபடுத்தி அறியும் அறிவை வழங்கியுள்ளான். தூதர்களைப் புரிந்துகொள்ளும் நல்வாய்ப்பை வழங்கியுள்ளான். தனது இருப்பு மற்றும் பண்புகளைப் பற்றிய அறிவை வழங்கியுள்ளான்.
(பீர் ஸிராஜுல் ஹக் ஸாஹிப் நுஃமானீ (ரலி) அவர்களின் நூல், தத்கிரத்துல் மஹ்தி - பாகம் 1, பக்கம் 182 - 183)

இவ்வாறு, மனநிலை பாதிக்கப்பட்டவர்களுடன் விவாதிக்காமல் அவர்களிடம் அழகிய முறையில் நடந்துகொள்ளுமாறு அறிவுறுத்திய அதே வேளையில், அல்லாஹ் வழங்கிய அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்ற போதனையையும் அன்னார் (அலை) வழங்கினார்கள். இத்தகைய மனிதர்களைக் காணும்போது, அல்லாஹ் நமக்கு அனைத்து அருட்கொடைகளையும் வழங்கியுள்ளானே என்று நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

ஹஸ்ரத் மலிக் முஹம்மது ஹஸன் முஹம்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

'ஹுஸுர் (அலை) அவர்கள் ஃபஜ்ர் தொழுகைக்காக வருகை தந்தார்கள். தொழுகைக்குப் பிறகு ஹுஸுர் அவர்கள் குத்தாமைப் பார்த்து, 'இரவில் சாரங்கி மற்றும் தம்பூரா இசைக் கருவிகளும், ஆடலும் பாடலும் எங்கே ஒலித்துக் கொண்டிருந்தன? அருகில் எங்கேனும் அண்டை வீட்டில் நடந்ததா?' என்று கேட்டார்கள். அதற்கு ஒருவர், 'ஹுஸுர்! மிர்ஸா நிஸாமுத்தீன் ஸாஹிப் ஒரு நாட்டியப் பெண்ணை அழைத்திருந்தார்.

அவர் இத்தகைய செயல்களைச் செய்து வந்தார்.

அப்பெண்ணுக்கு இரவுக்கு இருபது ரூபாய் தருவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. அந்த இருபது ரூபாய்க்காக இரவு முழுவதும் மிர்ஸா நிஸாமுத்தீனின் வீட்டில் நடனம் நடந்துகொண்டிருந்தது' என்று கூறினார். அதைக் கேட்ட ஹுஸுர் (அலை) அவர்கள் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு, 'அல்லாஹ்வே! இந்தப் பெண் எந்த அளவு நன்றியுணர்வு கொண்டவளாக இருக்கிறாள்!' என்று கூறினார்கள். அதாவது அந்த நாட்டியப் பெண்ணைக் குறிப்பிட்டு, 'இருபது ரூபாய்க்காக அவள் இரவு முழுவதும் ஆடியும் பாடியும் விழித்திருந்தாளே! ஆனால், நமக்கு எண்ணற்ற அருட்கொடைகளை வழங்கிய நமது உண்மையான படைப்பாளனுக்காகவும் அதிபதிக்காகவும் நம்மால் ஓரிரு மணிநேரம் கூட விழித்திருக்க முடிவதில்லையே!' என்று கூறினார்கள். மேலும் இந்த வாக்கியங்களை அன்னார் இரண்டு மூன்று முறை திரும்பத் திரும்பக் கூறினார்கள்.' (ரிவாயத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 3, பக்கம் 278)

இத்தகைய உலகாதாயப் பெண்களின் செயலைக் கண்டபோதும் கூட, அன்னாருடைய கவனம் இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றுவதன் பக்கம் திரும்பியது. 'இவர்கள் சில ரூபாய்களுக்காகத் தங்கள் தூக்கத்தைத் தியாகம் செய்கிறார்கள்; ஆனால் நாமோ அல்லாஹ் அளித்த எண்ணற்ற அருட்கொடைகளுக்கு நன்றியும் செலுத்துவதில்லை. நஃபில் தொழுகைகள் மற்றும் ஏனைய தொழுகைகளின் பக்கமும் கவனம் செலுத்துவதில்லை; விழித்திருப்பதும் இல்லை. மாறாக, நம்மில் பலர் ஃபர்ளான தொழுகைகளை நிறைவேற்றுவதிலும் கூட சோம்பல் காட்டுகிறார்கள்; ஃபஜ்ர் தொழுகைக்கு எழுவது கூட நமக்குக் கடினமாகிவிடுகிறது' என்று மிகுந்த வேதனையை வெளிப்படுத்தினார்கள்.

எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் இந்த விஷயத்தில் தன்னைத்தானே சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும்; நாம் எந்தளவுக்கு

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் கடமையை நிறைவேற்றி வருகிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஹுஸுர் (அலை) அவர்கள் உணவு உண்ணும் வேளையில் நன்றி செலுத்திய விதத்தைக் குறித்து ஹஸ்ரத் ஷேக் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் சர் தாவீ (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்:

'ஹுஸுர் அவர்களுக்கு உணவு உண்ணும்போது ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ் என்று கூறும் வழக்கம் இருந்தது. மேலும், ஏதோ ஒரு பொருளைத் தேடுவது போன்று உண்பார்கள்.' (ரிவாயத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 2, பக்கம் 413)

அதாவது, அந்த நேரத்திலும் ஒவ்வொரு உணவுக் கவளத்திலும் அல்லாஹ்வின் அருட்கொடைகளை நினைவுகூர்ந்து நன்றி செலுத்துபவர்களாகவே இருந்தார்கள்.

இது குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

'ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நாம் கண்டிருக்கிறோம். அவர்கள் ரொட்டி உண்ணும்போது, ரொட்டியிலிருந்து ஒரு சிறிய துண்டை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு, பற்களால் நன்றாக மெல்ல முடிகின்ற வரை நீண்ட நேரம் மென்றுகொண்டே இருப்பார்கள். அன்னாருக்கு பெரிய கவளமாக எடுத்து உண்ணும் வழக்கம் இருந்ததில்லை; மாறாக, எப்போதும் சிறிய கவளமாகவே எடுப்பார்கள். முதல் கவளத்தை நீண்ட நேரம் மென்றுகொண்டிருக்கும் வேளையில், ரொட்டியின் மற்றொரு துண்டை எடுத்துத் தமது கையில் பிசைந்துகொண்டே இருப்பார்கள்; அதோடு ஸுப்ஹானல்லாஹ், ஸுப்ஹானல்லாஹ் என்றும் கூறிக்கொண்டிருப்பார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு அதிலிருந்து ஒரு துண்டில் குழம்பு தொட்டு வாயில் போட்டுக்கொள்வார்கள்.' (தஃப்ஸீரே கபீர், தொகுதி 9, பக்கம் 261 - 262 2023=ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் ஸய்யித் ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

'எனது சிறுவயது காரணமாகவும், ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் எனது தந்தையாரான ஹஸ்ரத் டாக்டர் ஸய்யித் அப்துஸ் ஸத்தார் ஷாஹ் ஸாஹிப் அவர்களைத் தமது வீட்டிலேயே விருந்தினராகத் தங்க வைப்பது வழக்கம் என்பதாலும், நாங்கள் குடும்ப உறுப்பினர்களைப் போலவே அந்த வீட்டில் இருந்து வந்தோம். நாங்கள் எவ்விதத் தயக்கமுமின்றி வீட்டிற்குள் சென்று வருவோம்; ஹுஸுர் (அலை) அவர்களின் வீட்டிலேயே உறங்குவோம்.'

அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்: 'எனக்கு நன்றாக நினைவிருக்கிறது! அந்தப் பகுதியிலோ அல்லது நகரத்திலோ பிளேக் நோய் பரவத் தொடங்கியதுமே, ஹுஸுர் (அலை) அவர்கள் தமது வீட்டைத் தூய்மைப்படுத்துமாறு கட்டளையிட்டதுடன், போர்டிங் ஹவுஸை தூய்மைப்படுத்துவதற்கான ஏற்பாட்டையும் செய்தார்கள். அதேபோல், அனைத்து நண்பர்களும் தங்களது வீடுகளில் கந்தகம், நெருப்பு, ஃபினாயில் மற்றும் குகுல் - இது கிருமிகளை அழிப்பதற்காகவும் புகை போடுவதற்காகவும் பயன்படுத்தப்படும் ஒரு வகை மரப் பிசின் ஆகும் - போன்ற பொருட்களைக் கொண்டு கிருமிகளை அழிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கட்டளையிடுவார்கள்.'

ஹுஸுர் (அலை) அவர்கள் கூறும்போது, 'காரணிகளையும் பயன்படுத்துவது என்பது கூட அல்லாஹ்வின் அருட்கொடைக்கு நன்றி செலுத்துவதாகும். இதுவும் அல்லாஹ்வின் அருட்கொடையே; இத்தகைய நோய்களை, சூழலில் ஏற்படும் மாசுபாட்டை, அசுத்தத்தை அல்லது பரவும் நச்சுகளை அகற்றுவதற்கான பொருட்களை இறைவன் படைத்துள்ளான் என்பதற்காக அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்பார்கள்.'

மேலும், 'இது இறைவனின் அருட்கொடைக்கு நன்றி செலுத்துவதற்குச் சமமானது ஆகும். அவனது கட்டளையை நிறைவேற்றுவதற்கு ஒப்பானது ஆகும். காரண காரியங்களையும் வழிமுறைகளையும் புறக்கணிப்பது இறை ஷரீஅத்திற்கு எதிரானது. அதாவது, காரணிகளை பயன்படுத்தாமல் இருப்பது ஷரீஅத்திற்கு எதிரானதாகும். 'தவக்குல்' எனும் நிலை (இறைவன் மீது முழு நம்பிக்கை வைப்பது) இதன் பிறகே வருகிறது; அதாவது, வழிமுறைகளைக் கையாண்டுவிட்டு அவற்றின் மீதே முழு நம்பிக்கை வைத்துவிடக் கூடாது. மாறாக, அந்த வழிமுறைகளுக்குப் பின்னால் உள்ள இறைவனின் கரத்தைக் காண்பதே உண்மையான ஞானமாகும்.
(ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 5, பக்கம் 35) ( உருது அகராதி தொகுதி 16, பக்கம் 304, உருது போர்டு கராச்சி)

'நான் செய்யும் இந்த ஏற்பாடுகளும் அல்லாஹ்வால் படைக்கப்பட்ட பொருட்களே ஆகும்; இதில் அல்லாஹ் நமக்கு மேன்மைக்கான ஏற்பாடுகளை உருவாக்குவானாக! மேலும் இதற்காக நன்றி செலுத்துங்கள். இவ்வாறு மனிதன் சிந்தித்தால் அவன் எல்லா நேரத்திலும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவனாகவே இருப்பான்.

ஹஸ்ரத் முஹம்மது இப்ராஹீம் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: 'ஒருமுறை, 1904 ஆம் ஆண்டு கரம் தீன் வழக்கு தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குர்தாஸ்பூரில் தங்கியிருந்தபோது இந்த எளியவனும் ஒரு மாத காலம் குர்தாஸ்பூரில் ஹுஸுர் அவர்களுக்கு தொண்டாற்றுவதற்காக தங்கியிருந்தேன். ஒரு நாள், முல்தானைச் சேர்ந்த ஒரு நண்பர் புதிதாகப் பறிக்கப்பட்ட பேரீச்சம்பழங்களைக் கொண்டுவந்தார். அப்போது மற்றொரு நண்பர், இவை உடலுக்குச் சூட்டைத் தரும் என்று கூறினார். அதற்கு பேரீச்சம்பழங்களைக் கொண்டுவந்த நண்பர், நீங்கள் எவ்வளவு பேரீச்சம்பழங்களை வேண்டுமானாலும் சாப்பிடுங்கள்; அதற்குப் பிறகு சிறிதளவு வெங்காயத்தைச் சாப்பிட்டுவிட்டால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று கூறினார்.' முந்தைய காலத்தில் பெரியவர்கள் உடலுக்கு சூட்டைத் தரும் உணவைச் சாப்பிட்டால் அதன் வீரியத்தைத் தணிக்க வெங்காயம் சாப்பிடுவது போன்ற வைத்திய முறைகளைக் கொண்டிருந்தனர்.

இதைக் கேட்ட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், அல்லாஹ் எத்தகைய அற்புதமான ஏற்பாடுகளைச் செய்துள்ளான் என்றால், ஒவ்வொரு பொருளையும் சரிசெய்வதற்கு மற்றொரு பொருளைப் படைத்துள்ளான் என்று கூறினார்கள். அதாவது, அதன் பக்க விளைவுகளிலிருந்து பாதுகாப்பதற்காக மற்றொரு பொருளும் உள்ளது என்றார்கள்.
மேலும் அன்னார் கூறும்போது, 'மாம்பழங்களை எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடுங்கள். சர்க்கரை நோயாளிகள் மாம்பழம் சாப்பிடக் கூடாது; அதில் இனிப்பு அதிகம் என்று கூறுகிறார்கள். அதற்குப் பிறகு சிறிதளவு நாவல் பழங்களைச் சாப்பிட்டு விடுங்கள். நாவல் பழம் சர்க்கரை நோய்க்கு நல்லதொரு நிவாரணமாகும்; எந்தப் பாதிப்பும் ஏற்படாது. வாழைப்பழத்திலும் நன்மைகளும் தீமைகளும் உள்ளன; அதை எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிட்டுவிட்டு, அதற்குப் பிறகு சிறிதளவு அரிசியை மென்று சாப்பிட்டு விடுங்கள்; அனைத்தும் செரிமானமாகிவிடும் என்று கூறினார்கள்.

இதனைத் தொடர்ந்து, மனிதனுக்காக அல்லாஹ் ஆன்மிக ரீதியாகவும், பௌதிக ரீதியாகவும் எத்தகைய உயரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்துள்ளான் என்றால் மனிதனால் அவற்றுக்கு உரிய முறையில் நன்றியும் செலுத்தவே முடியாது என்று ஹுஸுர் (அலை) அவர்கள் ஒரு சொற்பொழிவில் கூறினார்கள். (ரிவாயாத்தே அஸ்ஹாப் அஹ்மது, தொகுதி 2, பக்கம் 172)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நூலான தஸ்கிரத்துஷ் ஷஹாதத்தைன் எனும் நூலை எழுதிய வேளையில், நோயிலிருந்து நிவாரணம் பெற்றதற்காக நன்றி உணர்வை வெளிப்படுத்தும் விதமாக இவ்வாறு எழுதுகிறார்கள்:

'நான் இந்நூலை எழுதத் தொடங்கியபோது, ஓர் எதிரியால் என் மீது தொடரப்பட்ட குற்றவியல் வழக்கு விசாரணைக்காக அக்டோபர் 16, 1903 அன்று குர்தாஸ்பூர் செல்வதற்கு முன்பாகவே இந்நூலை எழுதி முடித்து கையோடு எடுத்துச் செல்ல வேண்டும் என்று விரும்பினேன். ஆனால், எதிர்பாராதவிதமாக எனக்குக் கடுமையான சிறுநீரக வலி ஏற்பட்டது. இன்னும் இரண்டு மூன்று நாட்களே உள்ளன; உயிருக்கே ஆபத்தான இச்சிறுநீரக வலியால் நான் தொடர்ந்து அவதியுற்றால் ஒருவேளை இந்த எழுதும் பணியை நிறைவு செய்ய முடியாது போய்விடுமே; வேலை அரைகுறையாக நின்றுவிடுமே என்று எண்ணினேன்.

அப்போது இறைவன் எனக்கு துஆவின் பக்கம் கவனமூட்டினான். நள்ளிரவு 12 மணிக்கு மேல் சுமார் மூன்று மணிநேரம் கழிந்திருந்த வேளையில், எனது குடும்பத்தினரிடம், இப்போது நான் துஆ செய்கிறேன்; நீங்கள் ஆமீன் சொல்லுங்கள் என்று கூறி, குடும்பத்தினர் அனைவரையும் ஒன்று திரட்டினேன். அந்த வேதனையான நிலையில், அல்லாஹ்வே! இந்த மர்ஹூம் ஸாஹிப்ஸாதா மௌலவி அப்துல் லதீஃப் அவர்களுக்காகவே நான் இந்நூலை எழுத விரும்பியிருந்தேன் என்று எண்ணியவாறு துஆ செய்தேன்.

நான் இவ்வாறு துஆ செய்தவுடனேயே எனக்கு ஒரு சிறிய மயக்க நிலை ஏற்பட்டு, நிகரற்ற அன்புடைய இறைவனிடமிருந்து உமக்கு சாந்தியும் அமைதியும் உண்டாகட்டுமாக எனும் இல்ஹாம் இறங்கியது. என் உயிர் எவன் கையில் இருக்கிறதோ அந்த இறைவன் மீது ஆணையாக! காலை ஆறு மணி கூட ஆகவில்லை, அதற்குள் நான் முற்றிலும் குணமடைந்து விட்டேன். மேலும் அன்றைய தினமே நூலின் பாதியை எழுதி முடித்துவிட்டேன். இதற்காக அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்!' (தத்கிரத்துஷ் ஷஹாதத்தைன், ரூஹானீ கஸாயீன், தொகுதி 20, பக்கம் 74 - 75)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்வில் இருந்த மற்றொரு பிரகாசமான அம்சம் என்னவெனில், அன்னாரின் இயல்பில் சிறிய விஷயத்தையும் மதித்து பாராட்டுதல், நன்றியுணர்வை

*திருக்குர்ஆனிலிருந்து...*

**நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)**

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

வெளிப்படுத்துதல் ஆகியவை எந்தளவுக்கு நிறைந்து காணப்பட்டது என்றால், சிறியதாகத் தெரியும் உதவிகளுக்கும் செயல்களுக்கும் கூட அன்னார் நன்றி கூறுவார்கள்.

ஹஸ்ரத் மௌலவி அப்துல் கரீம் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இந்த வாரத்தில் நிகழ்ந்த மிகவும் வியப்பளித்த, சுவாரஸ்யமான, எங்களது ஈமானுக்குப் பெரும் வலிமையளித்த ஒரு விஷயம் என்னவென்றால்,

அதாவது அவர்கள் எடுத்துரைத்த அக்காலகட்டத்தில் நடந்த விஷயமாகும். அவர்கள் கூறுகிறார்கள்:

‘ ஹுஸுர் (அலை) அவர்களுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் காபூல் பகுதியைச் சேர்ந்த ஜலாலாபாத் எனும் இடத்தில் யூஸ் ஆஸஃப் எனும் நபியின் (நினைவாக ஒரு) மேடை அமைந்திருப்பதாகவும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சிரியா தேசத்திலிருந்து அந்த நபி இங்கு வந்ததாக அங்குப் பிரபலமாகப் பேசப்படுவதாகவும், காபூல் அரசாங்கத்தின் சார்பில் அந்த மேடையின் பெயரில் சில நிலங்கள் மான்யமாக வழங்கப்பட்டிருப்பதாகவும் ஆதாரப்பூர்வமாகவும் விரிவாகவும் எழுதப்பட்டிருந்தது. அதன் முழு விவரத்தையும் இங்கு விவரிக்க வேண்டியதில்லை. அந்தக் கடிதத்தைக் கண்டு ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்கள்.

யாரேனும் எனக்குக் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொண்டுவந்து கொடுத்திருந்தாலும் கூட, இந்தக் கடிதம் எனக்கு அளித்த மகிழ்ச்சியைப் போல் நான் ஒருபோதும் மகிழ்ச்சியடைந்திருக்க மாட்டேன் என்பதற்கு அல்லாஹ்வே சாட்சியாகவும் அனைத்தையும் அறிந்தவனாகவும் இருக்கிறான்!' என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்.‘

மௌலவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

‘சகோதரர்களே! ஒரு மார்க்க விஷயத்திற்காக ஏற்பட்ட இந்த மகிழ்ச்சி, அன்னார் இறைவனால் அனுப்பப்பட்டவர் என்பதற்கான அடையாளம் அல்லவா? அல்லாஹ்வின் வார்த்தையை உயர்த்துவதைக் குறிக்கும் ஒரு செய்திக்கு இன்று யாரால் இத்தகைய மகிழ்ச்சியை வெளிப்படுத்த முடியும்? அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன், அந்த நேரத்தில் ஹுஸுர் (அலை) அவர்களின் மகிழ்ச்சியைக் கண்டு, அதனை மதிப்பிட்டு என் மனதிற்குள் நான் மிகவும் வெட்கமடைந்தேன்; ஏனெனில் பொய்யின் வீழ்ச்சிக்காக மற்றொரு வழி கிடைத்துவிட்டதே, இப்போது ஈஸா (அலை) அவர்களின் பயணத்தின் முழு வரைபடமும் கிடைத்துவிட்டதே என்று நானும் நண்பர்களும் மகிழ்ச்சியடைந்த போதிலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மகிழ்ச்சிக்கு ஈடுஇணையே இருக்கவில்லை.‘(அல் ஹகம், தொகுதி 3, இதழ் 24, ஜூலை 10, 1889, பக்கம் 3, பத்தி 1)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது பராஹீனே அஹ்மதியா நூலை எழுதியபோது, அதற்கு நிதி உதவி அளித்தவர்களின் பெயர்களை அந்நூலில் குறிப்பிட்டு, அவர்களுக்கு நன்றி செலுத்தியவாறு அவர்களுக்காக துஆ செய்யுமாறு கவனமூட்டினார்கள். அந்த துஆப் பட்டியலில் ஐந்து ரூபாய், இரண்டு ரூபாய், ஏன் இரண்டு அணாக்கள் வரை நன்கொடை அளித்தவர்களின் பெயர்களும் இடம்பெற்றிருந்தன.


நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)


ஹுஸுர் அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்: ‘முதலில், ஒன்றுமில்லாத இந்த எளியவனுக்குத் தனது அருள், கொடை மற்றும் மறைமுக உதவிகளைக் கொண்டு இந்நூலை எழுதும் நல்வாய்ப்பை வழங்கிய அந்த அகிலங்களின் இறைவனுக்கு எவ்வாறு நன்றி செலுத்துவது! மேலும், இந்த நூலை வெளியிடவும், பரப்புவதற்கும், அச்சிடுவதற்கும் இஸ்லாத்தின் ஆதரவாளர்கள், பெரியோர்கள், தலைவர்கள், செல்வந்தர்கள், ஏனைய சகோதரர்கள், நம்பிக்கை கொண்டவர்கள் மற்றும் முஸ்லிம்களின் உள்ளங்களில் ஆர்வத்தையும் விருப்பத்தையும் ஏற்படுத்தினான். எனவே, இந்த இடத்தில் எனது மார்க்க நோக்கங்கள் வீணாகாமல் பாதுகாக்கப்பட்டதற்கும், எனது உழைப்பு வீணாகாமல் தப்பியதற்கும் காரணமாக இருந்த அந்த கண்ணியமிக்க உதவியாளர்கள் அனைவருக்கும் நன்றி செலுத்துவது கடமையாகும். அந்தச் சகோதரர்களின் உதவிகளுக்கு நான் எந்தளவுக்குக் கடமைப்பட்டுள்ளேன் என்றால், அவர்களுக்கு நன்றி செலுத்துவதற்கு என்வசம் வார்த்தைகளே இல்லை. குறிப்பாக, சிலர் இந்த நற்காரியத்திற்கு ஆதரவளிப்பதில் முந்திக்கொண்டு செயல்பட்டதையும், சிலர் இன்னும் உதவிகளைச் செய்வதாக வாக்குறுதி அளித்திருப்பதையும் காணும்போது எனது நன்றியுணர்வும் கடமைப்பாடும் மேலும் அதிகரிக்கின்றது.‘

பிறகு அன்னார், உதவி அளித்தவர்களின் பெயர்களையும் எழுதினார்கள். ‘இந்நூலை விலைக்கு வாங்கியும், அச்சிட உதவி செய்தும் பங்களித்த அந்த மனவுறுதியும் துணிச்சலும் மிக்க மனிதர்களின் அருளுக்குரிய பெயர்களை, அவர்கள் வழங்கிய தொகைகளுடன் இதோ பதிவிடுகிறேன்' என்று கூறி அனைவரின் பெயர்களையும் எழுதினார்கள். மேலும், ‘இனிவரும் காலத்திலும் நூல் அச்சிடப்பட்டு முடியும் வரை இதே நடைமுறை தொடரும் என்று கூறினார்கள்.‘

அதாவது, ‘உலகில் இந்நூலின் பலனும் அருளும் நிலைத்திருக்கும் வரை, நான் பெயர்களை எழுதிக்கொண்டே இருப்பேன். மக்கள் இந்த நூலினால் பயனடையும் வரை இந்த பெயர்கள் எழுதப்பட்டிருக்கும்; அதனால் மக்கள் அவர்களுக்காக துஆ செய்துகொண்டே இருப்பார்கள்' என்று கூறினார்கள்.

ஏனெனில் அன்னார், ‘இந்நூல் நிலைத்திருக்கும் வரை, இதன் மூலம் பயனடைந்து உள்ளம் மகிழும் ஒவ்வொருவரும் என்னையும் எனக்கு உதவியாளர்களாக இருந்தவர்களையும் நல் துஆக்களுடன் நினைவுகூர வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 'மினனுர் ரஹ்மான்' எனும் நூலை எழுதியபோது, அரபு மொழியே அனைத்து மொழிகளின் தாய் என்பதை நிரூபித்தார்கள். இது தொடர்பாகச் சில ஆதாரங்களைத் திரட்டுவதில் தமக்கு உதவியளித்த நண்பர்களுக்கு நன்றி தெரிவித்தவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

‘மொழிகளுக்கு இடையிலான தொடர்பை நிரூபிப்பதற்கான எமது இந்தப் பணியில் உதவி செய்த எமது நண்பர்களுக்கு நன்றி தெரிவிக்காமல் எம்மால் இருக்க முடியாது. மொழிகளின் பொதுவான தொடர்பை நிரூபிப்பதற்காக எமது கலப்பற்ற நண்பர்கள் ஆற்றிய கடின உழைப்பானது, இவ்வுலகம் நிலைத்திருக்கும் வரை நிச்சயம் நினைவு கூரப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறோம். இந்த இறை அடியார்கள் தங்களது பொன்னான நேரத்தை எமக்கு வழங்கி, இரவும் பகலும் கடுமையான உழைப்பையும் வியர்வையையும் சிந்தி இந்த மகத்தான பணியை நிறைவு செய்துள்ளார்கள். இறைவனிடத்தில் அவர்களுக்கு மிகப்பெரிய நற்கூலி காத்திருக்கிறது என்பதை நான் அறிவேன்; ஏனெனில் அவர்கள், விரைவில் இஸ்லாத்திற்கு வெற்றி முரசு கொட்டவிருக்கும் ஒரு போரில் பங்கு பெற்றுள்ளார்கள். எனவே, இவர்கள் ஒவ்வொருவரும் இறைவனின் விருதைப் பெறத் தகுதியானவர்கள் ஆவார்கள்.

ஒவ்வோர் அமர்விலும் சொற்களின் கூட்டமைப்பைக் கண்டறிவதற்காக அவர்கள் எவ்வளவு மனதிற்குள் நூற்றுக்கணக்கான மைல்கள் பயணம் செய்தார்கள் என்பதையும், பின்னர் எவ்வாறு வெற்றியுடன் திரும்பி வந்து (மொழிகளுக்கிடையிலான) ஒரு பொதுவான வார்த்தையைப் பரிசாக கொடுப்பார்கள் என்றால் அந்த நிலையை என்னால் வார்த்தைகளால் விவரிக்க முடியாது. இவ்வாறே உலக மொழிகள் அனைத்தும் எம்மிடத்தில் திரண்டுவிட்டன. இந்த மகத்தான பணியில் எமது கலப்பற்ற நண்பர்கள் செய்த உதவிகளை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்; அதனை மதிப்பீடு செய்து சொல்வதற்கு என்வசம் வார்த்தைகளே இல்லை. அவர்களின் இந்த உழைப்பை இறைவன் ஏற்றுக்கொண்டு, அவர்களைத் தனக்காக ஏற்றுக் கொள்வானாக! தூய்மையற்ற வாழ்விலிருந்து அவர்களை எப்போதும் தூரமாகவும் பாதுகாப்பாகவும் வைப்பானாக! தனது நேசத்தையும் விருப்பத்தையும் அவர்களுக்கு வழங்கி, அவர்களுடன் இருப்பானாக! ஆமீன் ஸும்ம ஆமீன் என்று துஆ செய்கிறேன்.‘

பிறகு அன்னார் (அலை) உதவி புரிந்தவர்களின் பெயர்களையும் எழுதினார்கள். அதில் முதன்மையாக ஹஸ்ரத் ஹகீம் மவ்லவி நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களையும், அதனைத் தொடர்ந்து ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்களையும், இன்னும் பல ஸஹாபிகளையும் குறிப்பிட்டுள்ளார்கள்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

‘இந்தப் பணியில் யாருடைய உழைப்பு அதிகம் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான்; எந்தவொரு கலப்பற்ற நபருடைய உழைப்பையும் அவன் வீணாக்க மாட்டான். எமது அறிவுக்கும் பார்வைக்கும் தெரிந்தவரை, எமது சகோதரர் ஹகீம் மவ்லவி நூருத்தீன் சாஹிப் (ரலி) மற்றும் சகோதரர் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) ஆகியோரின் முயற்சிகளே மிகவும் அதிகமானவையாகும். அவர்கள் அனைத்துத் தொடர்புகளையும் துறந்து பல மாதங்களாக இந்தப் பணிக்காக என்னுடன் தங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் சாஹிப் அவர்கள் இத்தகைய அனுதாபத்தை காட்டியதோடு மட்டுமின்றி, இந்தப் பணிக்காகத் தனது சொந்தப் பணத்தில் சிறந்த ஆங்கில நூல்களை விலைக்கு வாங்கி வரவழைத்ததுடன், இதற்காகவே விலைமதிப்பற்ற நூல்களையும் ஒன்று திரட்டினார்கள். அல்லாஹ் அவர்களுக்குச் சிறந்த கூலியை வழங்குவானாக; மேலும், நற்செயல் செய்பவர்களுக்கான கூலியை அல்லாஹ் வீணாக்குவதில்லை.‘ (மினனுர் ரஹ்மான், ரூஹானீ கஸாயீன், தொகுதி 9, பக்கம் 143 - 144)

மியா(ன்) மன்சூர் முஹம்மது சாஹிப் அவர்களைக் பற்றிக் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவனின் அருளுக்கு நன்றி செலுத்தும் விதமாக இந்த விஷயத்தைக் குறிப்பிடுவது கடமைகளில் ஒன்றாகும்; அது என்னவென்றால், எமது முக்கியமான எழுத்துப் பணிகளில் அல்லாஹ்வின் அருளால் எமக்கு ஒரு சிறந்த, தகுதிவாய்ந்த, தூய மனிதர்

கிடைத்துள்ளார். அவர், எமது அன்பிற்குரிய மியான்(ன்) மன்சூர் முஹம்மது எனும் காப்பி ரைட்டர் ஆவார். மிகவும் அழகாக எழுதக் கூடியவர். அவர் உலக நோக்கங்களுக்காக அன்றி, மார்க்கத்தின் மீதான அன்பினால் மட்டுமே பணியாற்றுகிறார். தமது சொந்த ஊரிலிருந்து ஹிஜ்ரத் செய்து இந்த காதியானிலேயே தங்கத் தொடங்கியுள்ளார். எனக்கு விருப்பமான முறையில் இத்தகைய கலப்பற்ற, ஆர்வமிக்க மனிதர் கிடைத்தது அல்லாஹ்வின் பேரருளாகும். இரவோ பகலோ எந்த நேரத்திலும் நான் அவரிடமிருந்து நகல் எழுதும் சேவையைப் பெறுகிறேன்; அவரும் இறை திருப்திக்காக முழு முயற்சியோடு இச்சேவையை ஆற்றி வருகிறார். இதன் காரணமாகவே, இந்த ஆன்மிகப் போர்க் காலத்தில் எதிரிகளை வீழ்த்தும் எமது நூல்களின் மூலம் எதிரிகள் மீது தொடர்ச்சியாகத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. உண்மையில், இத்தகைய ஆதரவான சூழல்களை ஏற்படுத்தித் தருவது கூட அல்லாஹ்வின் ஓர் அடையாளமாகும். எந்தப் பக்கத்திருந்து பார்த்தாலும் அனைத்து நல்வழிமுறைகளும் எனக்கு அமையப் பெற்றுள்ளன. மேலும், எழுத்தாற்றலில் எனக்கு எத்தகைய ஆற்றல் வழங்கப்பட்டுள்ளது என்றால், வெளிப்படையாக எனது கைகள் எழுதியபோதிலும், நானன்றி மலக்குகளே எழுதுவது போன்றுள்ளது.' (மஜ்மூஆ இஷ்திஹாராத், தொகுதி 2, பக்கம் 546, 2019-ம் ஆண்டு பதிப்பு)

ஹுஸூர் (அலை) அவர்கள் தமது தோழர்கள், தம்முடன் பணிபுரிபவர்கள் செய்த மிகச்சிறிய பணிக்குக் கூட நன்றி தெரிவிக்கும் எந்தவொரு வாய்ப்பையும் நழுவ விட்டதில்லை. இவர்கள் எனக்கு உதவினார்கள்; இதனால் இந்தப் பணி எனக்கு எளிதானது என்று கூறி, தமது உழைப்பு முழுவதையும் தமது தோழர்களைப் புகழ்வதற்கே பயன்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி சாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹுஸூர் (அலை) அவர்கள் பணியாளர்களின் மிகச்சிறிய பணிகளையும் எப்போதும் மதித்து, அவர்களை ஊக்கப்படுத்தி வந்தார்கள். அவர்களின் உழைப்பிற்குரிய கூலியை விட அதிகமாகவே வழங்குவார்கள். ஏதேனும் ஒரு நூலையோ அல்லது இதழையோ அவசரமாகவும் முக்கியமாகவும் அச்சிட்டு வெளியிட வேண்டிய சூழல் ஏற்பட்டு, இரவெல்லாம் பணிகள் நடக்கும் நாட்களில், ஹுஸூருடன் இணைந்து அச்சகப் பணியாளர்கள் பணியாற்றும்போது, அவர்களுக்காகப் பால் மற்றும் ஏனைய உணவுப் பொருட்களைச் சிறப்பு கவனத்துடன் ஏற்பாடு செய்து தருவார்கள். மேலும், வழக்கமான கூலியை விடக் கூடுதலான கூலியையும் வழங்கி, அவர்களின் பணிக்காக மகிழ்ச்சியடைவது மட்டுமின்றி நன்றியும் தெரிவிப்பார்கள். (ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், பாகம் 3, பக்கம் 348)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

'நபிமார்களின் உள்ளம் மிகுந்த நன்றியுணர்வு கொண்டதாகும். மிகச் சாதாரணமான ஒரு விஷயத்தையும் அவர்கள் மிகப்பெரிய உதவியாகவே உணர்வார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்கள் இரவும் பகலும் அச்சிடப்படும் வேளையில், அன்னார் தொடர்ந்து பல இரவுகள் தூங்காமல் இருந்தபோதிலும், இரவில் யாரேனும் ஒருவர் proof கொண்டுவந்து கூப்பிட்டால், தாமே நேரில் சென்று அதனைப் பெற்றுக்கொள்வார்கள். அதோடு, 'ஜஸாகல்லாஹு அஹ்ஸனல் ஜஸா! இவருக்கு எத்துணை சிரமம் ஏற்பட்டுள்ளது. இவர்கள் எவ்வளவு சிரமங்களைச் சகிக்கிறார்கள்! அல்லாஹ் இவர்களுக்கு நற்கூலி வழங்குவானாக!' என்று கூறுவார்கள். உண்மையில், ஹுஸூர் அவர்களோ இரவெல்லாம் விழித்திருப்பார்கள்.'

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

'பலமுறை ஹுஸூர் அவர்கள் பணியாற்றுவதைக் கண்டவாறே நான் உறங்கிவிடுவேன்; மீண்டும் எப்போது கண்விழித்துப் பார்த்தாலும் அவர்கள் பணியாற்றிக்கொண்டே இருப்பார்கள்; விடியற்காலை வரை இது தொடரும். மற்றவர்கள் இறைவனுக்காகவே பணியாற்றியபோதிலும், ஹுஸூர் (அலை) அவர்கள் அம்மக்களின் சிரமத்தை உணர்ந்தார்கள். ஏன்? ஏனெனில், நபிமார்களின் உள்ளத்தில் உதவியைப் பற்றிய உணர்வு அதிகமாக இருக்கும்.' (அல்ஃபஸ்ல், ஆகஸ்ட் 19, 1916, தொகுதி 4, இதழ் 13, பக்கம் 7, பத்தி எண்: 3)

அடுத்து, ஒரு சம்பவத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்:

'ஃபைஜுல்லாஹ் சக்கைச் சேர்ந்த ஹாஃபிஸ் நபி பக்ஷ் ஸாஹிப் அவர்கள் கூறினார்கள்;

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது தோட்டத்திற்கு உலாவுவதற்காகச் செல்லும்போது என்னையும் அழைத்துச் சென்றார்கள். அப்போது ஹுஸூர் அவர்களின் அருளுக்குரிய கரங்களில் மரத்தினால் ஆன ஒரு கைத்தடி இருந்தது. மரத்திலிருந்து பழத்தைப் பறிப்பதற்காக அந்த கைத்தடி எறியப்பட்ட போது அது மரத்திலேயே மாட்டிக்கொண்டது. தூரத்திலிருந்து எறியப்பட்ட அந்தத் கைத்தடி மரத்தில் எவ்வாறு சிக்கிக்கொண்டது என்றால், கீழே விழவே இல்லை. ஸஹாபிகள் எவ்வளவோ முயன்றும் அதை கீழே விழ வைக்க முடியவில்லை. அப்போது நான், ஹுஸூர்! நான் மரத்தில் ஏறி அதை இறக்கிவிடுகிறேன் என்று கூறி, உடனடியாக மரத்தில் ஏறி அந்தத் அருளுக்குரிய கைத்தடியை இறக்கிக் கொடுத்தேன். இதைக் கண்டு ஹுஸூர் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியும் ஆச்சரியமும் அடைந்து, மியான்(ன்) நபி பக்ஷ்! மரத்தில் ஏறி உடனடியாகத் தடியை இறக்கிவிட்டீரே, நீர் மகத்தான காரியம் செய்துள்ளீர்! மரத்தில் எவ்வாறு ஏறினீர்? மரத்தில் ஏற எங்கு கற்றுக்கொண்டீர்? இந்தக் கைத்தடி எமது தந்தையாரின் காலத்தைச் சேர்ந்ததாகும்; இன்று நீர் இதை எமக்கு புதிதாகப் பெற்றுத் தந்துவிட்டீர் என்று அன்பு நிறைந்த வார்த்தைகளால் திரும்பத் திரும்பக் கூறினார்கள். வழியிலும் கூட, மியான்(ன்) நபி பக்ஷ் மரத்தில் ஏறி கைத் தடியை இறக்கியது மகத்தான விஷயம் என்று பலமுறை கூறினார்கள். மேலும், பெரியவராக இருந்தாலும் சரி, சிறியவராக இருந்தாலும் சரி, எவரையும் 'நீ' என்ற வார்த்தையைக் கொண்டு விளிப்பது அன்னாருடைய வழக்கத்தில் இல்லை. நான் சிறுவனாக இருந்தபோதிலும், என்னை ஒருபோதும் 'நீ' என்று அன்னார் அழைத்ததில்லை.'

(ஸீரத்துல் மஹ்தி தொகுதி 1, பாகம் 3, அறிவிப்பு எண்: 543, பக்கம் 536)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்: 'டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் அவர்கள் என்னிடம் கூறியதென்னவென்றால், ஹஸ்ரத் (அலை) அவர்களுக்கு யாரேனும் அன்பளிப்பு கொண்டுவந்தால், அன்னார் மிகுந்த நன்றியுணர்வுடன் அதனைப் பெற்றுக்கொள்வார்கள்; மேலும், வீட்டிலும் அவர்களின் தூய எண்ணத்தைப் பற்றிப் பேசி, இன்ன நபர் இந்தப் பொருளை அனுப்பியுள்ளார் என்று கூறுவார்கள்.'

(ஸீரத்துல் மஹ்தி தொகுதி 1, பாகம் 3, அறிவிப்பு எண்: 713, பக்கம் 647)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சின்னச் சின்ன அன்பளிப்புகளுக்குக் கூட எவ்வாறு நன்றியுணர்வை வெளிப்படுத்தி வந்தார்கள் என்பது குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

மர்ஹூம் டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் ஸாஹிப் அவர்களின் மனைவி தமது குறிப்பில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்; 'ஒருமுறை டாக்டர் ஸாஹிப் அவர்கள் மூன்று மாத விடுப்பு எடுத்துக்கொண்டு ஆக்ராவிலிருந்து காதியானுக்கு வந்தார்கள். ஆக்ராவில் 'குர்மா' எனும் பாதுஷாஹ் போன்ற ஒரு வகை இனிப்புப் பண்டம் மிகவும் நேர்த்தியாகவும் பெரிய அளவிலும் தயாரிக்கப்படும். அது ஹுஸூர் (அலை) அவர்களுக்கும் மிகவும் பிடித்தமான ஒன்று. டாக்டர் சாஹிப் காதியானுக்கு வரும்போதெல்லாம் ஹஸ்ரத் (அலை) அவர்களுக்காகக் அதைத் தவறாமல் வாங்கி வருவார்கள்.

ஒருநாள் அவர்கள் வந்தபோது, ஹுஸூர் (அலை) அவர்கள் அன்று காலை முதல் உணவு எதுவுமே உட்கொண்டிருக்கவில்லை. அஸர் வேளையில் நான் வீட்டிற்குச் சென்றேன்; ஹுஸூர் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்து, என்னிடம் பயணத்தைப் பற்றி விசாரித்தார்கள்.

அப்போது ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், உணவு தயார் நிலையில் உள்ளது என்று கூறினார்கள். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள், தமக்கு சாப்பிட மனமில்லை என்று கூறினார்கள். உடனே ஹஸ்ரத் அம்மா ஜான் அவர்கள், முராத் காத்தூன் - அதாவது இந்த பெண்மணிதான் உங்களுக்காக ஆக்ராவிலிருந்து குர்மாக்களைக் கொண்டுவந்துள்ளார் என்று கூறினார்கள்.

இதைக் கேட்டதும் ஹுஸூர் (அலை) அவர்கள் முதலில் மிகுந்த மகிழ்ச்சியடைந்து, எனக்கு அவை மிகவும் பிடிக்கும், கொண்டு வாருங்கள் சாப்பிடுகிறேன் என்று கூறினார்கள்.

அவை முன்னால் கொண்டுவரப்பட்டபோது, ஹுஸூர் (அலை) அவர்கள் அதனை மிகவும் புகழ்ந்து, இவ்வளவு அதிகமாக உள்ளதா என்று கூறினார்கள். பின்னர் அன்னார் அதிலிருந்து சாப்பிட்டுவிட்டு, எனக்காக இவற்றை எடுத்து வையுங்கள். கொஞ்சம் சாப்பிட்டுவிட்டேன்; கொஞ்சம் பிறகு சாப்பிடுகிறேன் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்களின் உணவருந்தும் முறையைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது; அன்னார் கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடுவார்கள், துஆ செய்தவாறே சாப்பிடுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், அந்தப் பெண்மணி கூறுகிறார்கள்: இந்தச் சிறிய விஷயத்திற்காக அன்னார் இவ்வளவு பெரிய பாராட்டைத் தெரிவித்ததைக் கண்டு என் உள்ளம் எந்த அளவு மகிழ்ச்சியடைந்தது என்றால் அதை விவரிக்க சொற்கள் இல்லை. நான் இதனை டாக்டர் சாஹிபிடம் கூறியபோது அவர்களும்



மிகுந்த மகிழ்ச்சியடைந்து, நீண்ட நேரம் வானத்தை நோக்கி முகம் உயர்த்தி ஸுப்ஹானல்லாஹ், ஸுப்ஹானல்லாஹ் என்று ஓதிக்கொண்டே இருந்தார்கள்.
டாக்டர் சாஹிப் அவர்களும் மிகவும் தூய நபராக இருந்தார்கள்.
(ஸீரத்துல் மஹ்தி தொகுதி 2, பாகம் 5, அறிவிப்பு எண்: 1297, பக்கம் 193 - 194)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

'ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது குர்தாஸ்பூரில் பீனைச் சேர்ந்த மவ்லவி கரம் தீன் என்பவரால் வழக்கு தொடரப்பட்டிருந்த வேளையில், நிதி நெருக்கடி நிலவியது; செலவுகளும் அதிகரித்திருந்தன. அந்நேரத்தில் அல்லாஹ்வின் வழிகாட்டுதலின்படி சிலரிடம் நிதிப் பங்களிப்புக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டவர்களில் டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் ஸாஹிபும் ஒருவர்.

அந்தச் சமயத்தில் டாக்டர் சாஹிப் தமது வீட்டில் இருந்த அனைத்தையும் திரட்டி அனுப்பிவைத்ததுடன், இனிவரும் காலங்களிலும் தனது வருமானத்திலிருந்து வருவதை அனுப்பி வைக்கிறேன் என்றும் எழுதியிருந்தார்கள். அதன்படியே, தமது சம்பளம் மற்றும் மருத்துவப் பயிற்சி மூலமாகக் கிடைக்கும் வருமானம் அனைத்தையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தொண்டுக்காக அனுப்பி வைப்பார்கள்.

அந்த நாட்களில் அவர்களின் விருந்தினராக இருந்த ஒரு நண்பர் கூறுகையில், நான் டாக்டர் சாஹிபிடம், நீங்கள் அனைத்தையும் அங்கு அனுப்பிவிடுகிறீர்களே, உங்களுக்காக எதையும் வைத்துக்கொள்வதில்லையா என்று கேட்டேன். அதற்கு அவர்கள், ஆம்! இது அத்தகையதொரு காலம்; ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டிய காலம் இதுதான் என்று பதிலளித்தார்கள்.

அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் டாக்டர் சாஹிபுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

அதனை நானும் படித்திருக்கிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் ஸாஹிபுக்கு எழுதிய அக்கடிதத்தில், தாங்கள் தியாகத்தின் எல்லைக்கே சென்றுவிட்டீர்கள்; இனி தாங்கள் சந்தா அளிக்க வேண்டிய அவசியமில்லை என்று குறிப்பிட்டிருந்தார்கள். அவர்கள் அந்த அளவிற்கு தியாகம் செய்து கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழக்கமாக, தொடர்ந்து சந்தா செலுத்துங்கள்; மூன்று மாதங்கள் சந்தா செலுத்தாதவர் ஜமாஅத்தில் நீடிக்க முடியாது என்று வலியுறுத்தி வந்தபோதிலும், டாக்டர் ஸாஹிபுக்கு இவ்வாறெழுதினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

இக்கடிதம் இன்னமும் மர்ஹூம் கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிபின் வீட்டில் இருக்கலாம். அதன்பிறகும் கூட டாக்டர் சாஹிப் சந்தா கொடுத்து வந்தார்கள். அவர்கள் (அவ்வாறு) கொடுக்கவும் வேண்டும்! கடிதம் வந்தபிறகு அவர்கள் சந்தா கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள் என்பதில்லை; அவர்கள் தொடர்ந்து சந்தா கொடுத்து வந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

அவர்கள் தொடர்ந்து கொடுக்கவும் வேண்டும்; ஏனெனில், முதலில் அவர்கள் தங்களது கடமையை நிறைவேற்றினார்கள். பின்னர் நன்றியுணர்வின் வெளிப்பாடாக அதனை கொடுத்து வந்தார்கள்.'

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வின் வஹீயின் அடிப்படையில் எழுதிய அல் வஸிய்யத் எனும் நூலில், எங்களை - அதாவது தமது பிள்ளைகளை - வஸிய்யத்திலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டவர்களாக ஆக்கினார்கள். எங்களுக்குத் தியாகம் செய்வதற்கான ஒரு வாய்ப்பு மறுக்கப்பட்டுவிட்டதே எனும் ஒரு சிறிய ஆதங்கம் என் மனதில் எப்போதும் இருந்து வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எத்துணை அதிகமான இறை வணக்கங்களைச் செய்வார்கள் என்றால், அவர்களின் பாதங்கள் வீங்கிவிடும்; இதைக் கண்ட ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், அல்லாஹ் தங்களது அனைத்து பாவங்களையும் மன்னித்துவிட்ட பின்னரும் தாங்கள் ஏன் இவ்வளவு சிரமத்தை மேற்கொள்கிறீர்கள் என்று கேட்டபோது, அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நான் இறைவனுக்கு நன்றி செலுத்தும் அடியானாக இருக்க வேண்டாமா என்று பதிலளித்தார்கள். இந்த சம்பவம் என் நினைவுக்கு வந்தது.'

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

'இத்தகைய நிலையை அடையும்போது, கடமையாகவோ அல்லது கட்டாயமாகவோ இல்லாவிட்டாலும் கூட, நன்றியுணர்வின் வெளிப்பாடாகச் செயலாற்ற வேண்டும். வஸிய்யத்தின் சந்தாவிலிருந்து எங்களுக்கு விதி விலக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், நாமும் நன்றி செலுத்தத்தானே வேண்டும் எனும் எண்ணம் எனக்கு வந்தது. அதன்படி, வஸிய்யத் செய்தவர்களின் சந்தாவை விட எனது சந்தா அதிகமாகவே இருக்கும் வகையிலான ஒரு வழிமுறையை நான் பின்பற்றத் தொடங்கினேன். பின்னர், எனக்கு வந்த ஓர் இல்ஹாமும் என் நினைவுக்கு வந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மறைவுக்குச் சில நாட்களுக்குப் பிறகு எனக்கு வந்த இல்ஹாம் என்னவெனில்,அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை தாவூத் ஆக ஆக்கியுள்ளான்; தாவூதே! மக்களிடம் மென்மையாகவும் அழகிய முறையிலும் நடந்து கொள்வீராக! என்று கூறியுள்ளான்.

அதாவது, அல்லாஹ் சில மனிதர்களிடமிருந்து சிரமங்களை நீக்கிவிடுகிறான்; இருப்பினும் நன்றியுணர்வின் வெளிப்பாடாகச் செயலாற்றுவது அவர்களின் கடமையாகும். எனது அந்த ஆதங்கத்தைப் போக்குவதற்காகவே இந்த இல்ஹாம் வந்திருக்க வேண்டும்.'

எனவே, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகையில், 'அதன் பின்னர் நான் அதிகமான சந்தாவை வழங்கி வந்தேன்' என்று குறிப்பிடுகிறார்கள்.

இங்கு ஒரு விஷயத்தை தெளிவுபடுத்த விரும்புகிறேன்; ஏனெனில் எனக்கும் சில கேள்விகள் வந்திருந்தன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த அனைவருக்கும் அல்லது கலீஃபாக்களுக்குச் சந்தா கிடையாது; அவர்கள் விதிவிலக்கு வழங்கப்பட்டவர்கள் என்று சிலர் கேள்வி எழுப்புகிறார்கள்.

எனவே தெளிவுபடுத்துவது என்னவெனில், இந்த விதிவிலக்கானது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஐந்து பிள்ளைகளுக்கு மட்டுமே உரியதாகும்! அன்னாருடைய மகன்களின் மனைவிகளுக்கோ, மகள்களின் கணவர்களுக்கோ அல்லது அவர்களின் சந்ததியினருக்கோ கிடையாது. எவர் வஸிய்யத் செய்வாரோ அவர் வஸிய்யத் சந்தாவை கொடுத்துதான் ஆக வேண்டும்; வஸிய்யத் செய்த ஏனைய மக்களைப் போன்று தங்களது சொத்துக்கான சந்தாவையும் வழங்க வேண்டும்.

மேலும், காதியானில் உள்ள பெஹிஷ்தி மக்பராவின் நிலத்தையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களே நன்கொடையாக அளித்திருந்தார்கள் எனும் காரணமும் இதற்கு இருக்கலாம்; இன்னும் பல காரணங்களும் அல்லாஹ்வின் பார்வையில் இருக்கலாம். இதன் காரணமாகவே அல்லாஹ் அன்னாரின் ஐந்து பிள்ளைகளுக்கு வஸிய்யத்தின் சந்தாவிலிருந்து விதிவிலக்கு வழங்கி, பெஹிஷ்தி மக்பராவில் அடக்கம் செய்ய அனுமதியும் அளித்தான். ஆனால், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களும் அந்த ஐந்து பிள்ளைகளும் வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் எவ்வளவோ தியாகங்களைச் செய்துள்ளனர்.

ஆக,எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியது போல, அன்னார் (ரலி) ஜமாஅத்தின் நோக்கங்களுக்காக ஒரு வஸிய்யத் செய்தவரை விட அதிகமாக பொருள் தியாகங்களைச் செய்துள்ளார்கள்; அதேபோன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (ரலி) அவர்களின் ஏனைய பிள்ளைகளும் தியாகங்கள் செய்துள்ளனர். மேலும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்குப் பிறகு வந்த எந்தவொரு கலீஃபாவுக்கும் இதில் விதிவிலக்கு இருந்ததில்லை என்பதும் தெளிவுபடுத்தப்படுகிறது. அவர்கள் அனைவரும் வஸிய்யத் செய்து, தங்களது வஸிய்யத் சந்தாவைத் தவறாமல் செலுத்தி வந்துள்ளார்கள். அதேபோல், கலீஃபாக்களால் அறிவிக்கப்படும் ஏனைய சந்தா திட்டங்களிலும் அனைவரும் பங்கேற்று, தங்களது வசதிக்கு ஏற்ப முந்திக் கொண்டு பங்கெடுத்துள்ளார்கள். கலீஃபாவுக்கோ அல்லது அக்குடும்பத்தைச் சேர்ந்த எவருக்குமோ எவ்வித விதிவிலக்கும் கிடையாது; அந்த விதிவிலக்கு அந்த ஐந்து பிள்ளைகளுக்கு மட்டுமே உரியதாக இருந்தது. சில இடங்களிலிருந்து எனக்கு இந்த கேள்வி வந்திருந்ததால் இந்த விளக்கத்தை நான் கொடுக்கிறேன்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கும்போது, முன்ஷீ அப்துல் அஸீஸ் ஸாஹிப் ஒஜலவி (ரலி) அவர்கள் தமக்கு எழுதிய குறிப்பில் இவ்வாறு கூறியதாகப் பதிவு செய்துள்ளார்கள்:

'மவ்லவி முஹம்மது ஹுஸைன் படால்வி அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது குர்தாஸ்பூரில் குற்றவியல் வழக்குத் தொடர்ந்திருந்த வேளையில், ஹுஸுர் அவர்கள் கான் சாஹிப் அலி முஹம்மது சாஹிப் ஒய்வூதியதாரரின் வீட்டில் - ஹிஜாமா பள்ளிவாசலை ஒட்டிய வீட்டில் - தங்கியிருந்தார்கள். இந்த எளியவனும், சேக்வானைச் சேர்ந்த மியா(ன்) ஜமாலுத்தீன், இமாமுத்தீன் மற்றும் கைருத்தீன் ஆகியோரும் ஹுஸுர் அவர்களுடன் தங்கியிருந்தோம். ஏனைய நண்பர்கள் வேறு இடங்களில் தங்கியிருந்தார்கள்.

ஒருநாள், ஹுஸுர் அவர்களுக்கு வயிறு உபாதை ஏற்பட்டது. பொதுவாகவே அன்னாருக்குக் குடல் தொடர்பான கோளாறு இருந்து வந்தது; எனவே அன்னார் அடிக்கடி இயற்கை உபாதையைக் கழிப்பதற்காகச் சென்றுவந்தார்கள். ஹுஸுர் அவர்கள் எங்களிடம், நான் எழும்போது நீங்கள் எழ வேண்டாம்; உறங்குங்கள் என்று கூறினார்கள். ஆனால் ஹுஸுர் அவர்கள் எழும்போதெல்லாம், இந்த எளியவனும் உடனடியாக எழுந்து,

தண்ணீர்ப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு ஹுஸூர் அவர்களுடனேயே செல்வேன். இரவு முழுவதும் இவ்வாறே தொடர்ந்தது. ஒவ்வொரு முறையும் ஹுஸூர் அவர்கள், நீங்கள் உறங்குங்கள் என்றே கூறினார்கள்.

காலையில் சபையில் அமர்ந்திருந்தபோது ஹுஸூர் அவர்கள் எங்களைக் குறிப்பிட்டு இவ்வாறு கூறினார்கள்:

ஈஸா நபியின் சீடர்களுக்கும் எமது தோழர்களுக்கும் இடையே ஒரு தெளிவான வேறுபாடு உள்ளது. ஈஸா நபிக்கு ஒரு கஷ்டமான சூழ்நிலை வந்தபோது அவர்கள் தமது சீடர்களை எழுப்பி, விழித்திருந்து துஆ செய்யுங்கள் என்று கூறினார்கள்; ஆனால் அவர்களோ உறங்கிவிட்டார்கள். ஈஸா நபி, அவர்களை மீண்டும் மீண்டும் எழுப்பியபோதிலும் அவர்கள் உறங்கிவிட்டார்கள். ஆனால், முஹம்மதிய மஸீஹின் தோழர்களாகிய எமது நண்பர்களின் நிலையோ வேறாக உள்ளது. நாம் எமது நண்பர்களிடம் உறங்குங்கள் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தியபோதிலும் அவர்கள் விழித்திருக்கிறார்கள்.

அதனைத் தொடர்ந்து, இந்த எளியவனின் பெயரைக் குறிப்பிட்டு, மியா(ன்) அப்துல் அஸீஸ் இரவு முழுவதும் உறங்கினாரா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை. நான் எழுந்தவுடனேயே மிகுந்த சுறுசுறுப்புடன் விழித்தெழுந்துவிடுவார். நான் மீண்டும் மீண்டும் உறங்குங்கள் என்று வலியுறுத்தியபோதிலும் அவர் எழுந்துவிட்டார் என்று கூறினார்கள்.'

இதைப் பற்றி ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் கருத்து தெரிவித்தவாறு கூறுகிறார்கள்:

'நாஸரேத்தைச் சேர்ந்த ஈஸா நபியின் கூற்றான, 'மரம் அதன் கனியால் அறியப்படுகிறது' என்பது முற்றிலும் உண்மையானதாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சகவாசம் உருவாக்கிய இனிமையான கனியை, நாஸரேத்தின் ஈஸா நபியின் சகவாசத்தால் ஒருபோதும் உருவாக்க முடியவில்லை என்பதை நடுநிலையான எந்தவொரு மனிதனும் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பரிசுத்த மூச்சுக்காற்று, அன்னாருக்காகத் தங்களது உயிரைத் தியாகம் செய்வதையே அனைத்துப் பெருமைகளையும் விடப் பெருமையாகக் கருதக்கூடிய, இன்றும் கருதிவருகின்ற ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கானோரைக் கொண்ட ஒரு ஜமாஅத்தை உருவாக்கியது. மேலும், அன்னாருடைய மிகச் சிறிய சிரமத்திற்காகத் தங்களது அனைத்து வசதிகளையும் நிம்மதியையும் தியாகம் செய்ய அவர்கள் தயாராக இருந்தார்கள்; இன்றும் தயாராக உள்ளார்கள். ஆனால், நாஸரேத்தைச் சேர்ந்த ஈஸா நபியால் பன்னிரண்டு பேரைக் கொண்ட சிறிய குழுவைக் கூடக் கட்டுப்படுத்த முடியவில்லை; அவர்களில் ஒருவன் முப்பது ரூபாயைப் பெற்றுக் கொண்டு அவர்களைக் காட்டிக் கொடுத்து அரசாங்கத்திற்குத் தகவல் தெரிவித்துவிட்டான்.' (ஸீரத்துல் மஹ்தி தொகுதி 1, அறிவிப்பு எண்: 701, பக்கம் 639 - 640)

ஹஸ்ரத் இனாயத்துல்லாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

'நான் முதன்முறையாக காதியானுக்கு வந்தபோது, அத்தர் பாட்டில் ஒன்றைக் கையோடு கொண்டுவந்தேன். நான் நடந்தே பயணம் செய்திருந்தேன்; இரவில் படாலாவில் தங்கினேன். பாட்டிலைப் பார்த்தபோது, ஒரேயொரு சொட்டைத் தவிர பாக்கி அனைத்தும் சிந்தி வீணாகியிருந்தது. எனக்கு மிகுந்த மனவருத்தம் ஏற்பட்டது. மாலைத் தொழுகையின் போது ஹுஸூர் அவர்கள் மஸ்ஜித் முபாரக்கின் மாடிக்கு வருகை தந்தபோது, நான் கை குலுக்கிவிட்டு, ஹுஸூர் அவர்களின் உடலைப் (லேசாக) பிடித்துவிடத் தொடங்கினேன். அப்போது, நான் உங்களுக்காக அத்தர் பாட்டில் ஒன்றைக் கொண்டுவந்தேன்; ஆனால் வழியில் அது சிந்தி வீணாகிவிட்டது என்று கூறி, அந்த ஒரேயொரு சொட்டுடன் கூடிய பாட்டிலை ஹுஸூர் அவர்களின் முன் சமர்ப்பித்தேன். அதற்கு, ஹுஸூர் (அலை) அவர்கள், உமக்கு முழு பாட்டிலுக்குரிய நற்கூலியும் கிடைத்துவிட்டது; ஜஸாகல்லாஹ் என்று கூறினார்கள்.'
(ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 1, பக்கம் 131)

ஹஸ்ரத் முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

'எனக்குச் சுமார் இருபது வயதிருக்கும்போது, குர்தாஸ்பூரில் கரம் தீன் ஜஹ்லமி பீ(ன்) - ஜஹ்லம் மாவட்டத்தைச் சேர்ந்தவர், அல்லது இன்றைக்கு சக்வால் மாவட்டத்தில் உள்ளது - என்பவரது வழக்கின் தீர்ப்பு வழங்கப்படவிருந்தது. தீர்ப்புக்கு ஒருநாளுக்கு முன்பே எனது கிராமத்திலிருந்து அங்கு சென்று சேர்ந்தேன். அங்கு ஒரு பங்களாவில் ஹுஸூர் (அலை) அவர்கள் தங்கியிருந்தார்கள். அது கோடைக்காலம்; ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓர் அறையில் அமர்ந்திருந்தார்கள். அங்கு எனது தந்தை மியா(ன்) ஜமாலுத்தீன் சாஹிப், சேக்வானைச் சேர்ந்த மியா(ன்) முஹம்மது தீன் சாஹிப் மற்றும் சௌத்ரி அப்துல் அஸீஸ் சாஹிப் ஆகியோரும் இருந்தார்கள்.

நான் உள்ளே சென்று ஹுஸூர் அவர்களுக்கு விசிறியால் விசிறத் தொடங்கினேன். ஹுஸூர் (அலை) அவர்கள் என்னைப் பார்த்து, எனது தந்தையார் மியா(ன்) ஜமாலுத்தீன் சாஹிப்பை நோக்கி புன்னகையுடன், மியா(ன்) இஸ்மாயீலும் வந்து நற்கூலியில் பங்கைப் பெற்றுக்கொண்டார் என்று கூறினார்கள். ஹுஸூர் அவர்கள் மிகச் சாதாரணமான, சிறிய தொண்டுக்கும் இவ்வாறு மகிழ்ச்சியடைந்தது இப்போதும் எனக்கு அது நினைவுக்கு வரும்போது உள்ளத்தில் ஒருவித இன்பம் ஏற்படுகிறது.'
(ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 2, பக்கம் 139)

ஹஸ்ரத் மியா(ன்) ஸத்ருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

'ஹுஸூர் அவர்களின் உடலில் கம்பளிச் சால்வை ஒன்று இருக்கும்; அதைத் தமது தோள்களில் போர்த்தியவாறே ஹுஸூர் அவர்கள் வெளியே வருகை தருவார்கள். ஒருமுறை சௌத்ரி பூலே என்னிடம் கூறுகையில், ஒருமுறை நான் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுடன் படாலாவுக்குச் சென்றேன். அவர்களிடம் ஒரு குதிரை இருந்தது. சிறிது நேரம் ஹுஸூர் அவர்கள் அதில் சவாரி செய்தார்கள்; பின்னர் என்னை அதில் அமர வைத்தார்கள்.

அதாவது, முதலில் தாமே சவாரி செய்துவிட்டுப் பின்னர் அவரை அமர வைத்தார்கள்.

அதன் பிறகு, குதிரைக்கும் சிறிது ஓய்வு கிடைக்கட்டும் என்பதற்காகச் சிறிது நேரம் குதிரையை வெறுமனே நடத்திச் சென்றார்கள். அதேபோன்று, மத்ரஸா அஹ்மதிய்யாவின் ஊழியரான சிராஃபீக் என்பவரின் தந்தையார் என்னிடம் கூறியதென்னவென்றால், ஒருமுறை ஹுஸூர் அவர்கள் குளிப்பதற்காகப் ஃபஜ்ஜே காஷ்மீரி என்பவரின் கிணற்றுக்கு என்னை அழைத்துச் சென்றார்கள். வழியில் எனக்கு ஒரு பைசாவைக் கொடுத்து எள்ளு மிட்டாய் வாங்கி வரச் சொன்னார்கள்.

அவர் முதலிலிருந்து தனது சம்பவத்தைக் கூறிவந்த போதிலும், நன்றியுணர்வின் அசல் சம்பவம் இங்கிருந்துதான் தொடங்குகிறது;

ஹுஸூர் அவர்கள் பைசாவைக் கொடுத்து எள்ளு மிட்டாய் வாங்கி வரச் சொன்னார்கள். நான் வாங்கி வந்ததும், ஹுஸூர் அவர்கள் அதை இரண்டு பங்குகளாகப் பிரித்து, ஒரு பங்கை எனக்குக் கொடுக்கத் தொடங்கினார்கள். நான் அதனைப் பெற மறுத்துவிட்டேன். அதற்கு ஹுஸூர் அவர்கள், நான் மட்டும் தனியாக எப்படி உண்பேன்? பைசா என்னுடையது; நான் வாங்கி வரச் சொன்னேன். உமது உழைப்போ அதில் அடங்கியுள்ளது; நீர் உழைத்திருக்கிறீர் என்று கூறினார்கள். அதன்படி, பாதி பங்கு எள்ளு மிட்டாயை எனக்குக் கொடுத்தார்கள்.

இதுவும் மற்றவர்களின் உழைப்பிற்கு நன்றி செலுத்தும் ஒரு முறையாகும். சிறியவரோ பெரியவரோ, எந்தவொரு கோணத்திலும் தனக்குப் பணியாற்றியவர்களுக்கு எவ்வித வேறுபாடின்றி ஒவ்வொருவருக்கும் ஹுஸூர் அவர்கள் நன்றி செலுத்துவார்கள். இதற்கான பல உதாரணங்களை நான் எடுத்துரைத்து விட்டேன்.

ஹஸ்ரத் ஷேர் முஹம்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'கரம் தீன் வழக்கின் நிமித்தமாக ஹுஸூர் அவர்கள் ஜெஹ்லமிற்கு விசாரணைக்காகச் சென்றிருந்தபோது, படாலாவில் இருந்த எனது நண்பர்கள் தேநீருக்கான ஏற்பாடு செய்து எங்களை அழைத்திருந்தார்கள். நாங்கள் அனைவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடனும், ஹஸ்ரத் மவ்லவி அப்துல் லதீஃப் ஸாஹிப் ஷஹீத் (ரலி) அவர்களுடனும் சென்றிருந்தோம்.

அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள், தேநீர் உபசரிப்பு கொடுத்தவர் யார் என்று கேட்டார்கள். நண்பர்கள் தேநீருக்கு அழைத்திருந்தார்கள் என்பதால், இந்த எளியவன், ஹுஸூர்! தங்களது இந்த தொண்டர்கள் ஆங்கிலேய அதிகாரிகளின் மனைவிகளின் வீடுகளில் சமையல் செய்பவர்கள் என்று கூறினேன்.

அதாவது, நாசரேத்தின் இயேசுவை கடவுள் என்றும் கடவுளின் மகன் என்றும் பிரச்சாரம் செய்து திரியும் ஆங்கிலேய அதிகாரிகளின் வீடுகளில் சேவையாற்றுபவர்கள் அல்லது அவர்களின் பணியாளர்களாக இருக்கும் சமையல் காரர்களே இவர்கள் ஆவார்கள் என்று கூறினேன்.'

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதனைக் கேட்டதும் மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதோடு, தேநீர் விருந்துக்கான ஏற்பாடு செய்திருந்த அந்த நண்பர்களுக்கு நன்றியும் தெரிவித்தார்கள். அவர்கள் கிறிஸ்தவர்களாகவோ, முஸ்ிம் அல்லாதவர்களாகவோ அல்லது ஏனைய நண்பர்களாகவோ இருந்தபோதிலும், ஹுஸூர் அவர்கள் அங்கே வெறுமனே நன்றி தெரிவித்ததோடு நிறுத்திவிடாமல், இவர்கள் எனக்கு அங்கு தொண்டாற்றினார்கள் என்று அவர்களுக்கான நன்றியைப் பின்னர் செய்தித்தாளிலும் அறிவித்தார்கள்.

ஹுஸூர் அவர்கள் அந்த மக்களுக்கு அந்தளவுக்கு முக்கியத்துவம் அளித்தார்கள்; வெறும் நன்றியோடு நிறுத்திக் கொள்ளாமல் அதனை அறிவிக்கவும் செய்தார்கள்.


Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

(ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 2, பக்கம் 376)

அல்லாஹ் நமக்கும் நன்றியுணர்வின் இத்தகைய மேலான தரங்களை மேற்கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

(தினசரி அல்-ஃபஸ்ல் இன்டர்நேஷனல், 11 செப்டம்பர் 2026, பக்கம் 2 முதல் 7)

தமிழாக்கம்
முரப்பி
A.P.A. தாரிக் அஹ்மது

* * * * * * * * * * *

## உ-ம் பக்கத் தொடர்ச்சி (தலையங்கம்)......

கிலாஃபத்தின் காலகட்டத்தில் அஹ்மதிய்யத்தின் கொடியும் ஏற்றப்படத் துவங்கியது. காதியான் மற்றும் இந்தியாவைக் கடந்து இந்த ஜல்ஸாவில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை உலகின் பல்வேறு நாடுகள் வரை பரவத் தொடங்கியது. மேலும் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் இந்த ஜல்ஸாக்களில் கலந்து கொள்ளத் துவங்கினர். மூன்றாவது கிலாஃபத்தில் 1981-ம் ஆண்டு ரப்வாவில் நடந்த கடைசி ஜல்ஸாவில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை அல்லாஹ்வின் அருளால் 2 லட்சமாக இருந்தது. விருந்தினர்களுக்காக நவீன வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. அஹ்மதி பொறியாளர்கள் சொந்தமாக தயாரித்த ரொட்டி சுடும் இயந்திரங்களும் அமைக்கப்பட்டன.

மூன்றாம் கிலாஃபத்திற்குப் பிறகு நான்காம் கிலாஃபத்தில் ஒரு பக்கம் பிரிட்டனில் தலைமையக ஜல்ஸா ஸாலானா நடைபெற்று வந்தது என்றால், மற்றொரு பக்கம் இந்த ஜல்ஸாவின் கிளைகள் பல்வேறு நாடுகளில் பரவத் தொடங்கின. அங்கு பரந்துபட்ட நிலங்கள் வாங்கப்பட்டு ஜல்ஸா திடல்கள் அமைக்கப்பட்டன. ஆக, நீங்கள் பாருங்கள்! காதியான், ரப்வா மட்டுமின்றி பிரிட்டன், அமெரிக்கா, கனடா, ஆஃப்ரிக்கா மற்றும் தீபகற்பங்களின் பல்வேறு நாடுகளில் அனைத்து விதமான வசதிவாய்ப்புகளுடன் மிகவும் பரந்துபட்ட சென்டர்கள் நிறுவப்பட்டுள்ளன ; மேலும் அங்கு ஜல்ஸா ஸாலானா ஆயிரக்கணக்கான விருந்தினர்களுடன் மிகவும் சீரும், சிறப்புமாக நடந்தப்பட்டு வருகின்றது.

நிச்சயமாக ஜல்ஸா ஸாலானா ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் சத்தியம் மற்றும் உண்மைத்துவத்திற்கு ஒரு மாபெரும் அடையாளமாகும்.

நமக்கு இந்த புனித தாருல் அமான் காதியானில் ஒவ்வோர் ஆண்டு ஜல்ஸாவிலும் பங்கேற்கும் நற்பேறு கிடைக்கின்றது. இந்த அடிப்படையில் இந்தியாவைச் சேர்ந்த அஹ்மதிகளாகிய நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். அல்ஹம்துலில்லாஹ்! எங்கு நடைபெற்ற ஜல்ஸாவில் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும், அன்னாருடைய ஸஹாபிகளும் பங்கேற்றிருந்தார்களோ மேலும், எங்கு அஹ்மதிய்யத்தின் பரிசுத்த கலீஃபாமார்கள் ஜல்ஸாவில் பங்கெடுத்து வந்தார்களோ, மேலும் எங்கு இறைவனின் மஸீஹ் பகலும், இரவும் துஆக்கள் செய்து வந்தாரோ அங்கு நடைபெறும் ஜல்ஸாவில் பங்கெடுக்கும் நற்பேறு நமக்கு கிடைத்துள்ளது.

எனவே நாம் இந்த நற்பேறின் மீது பெருமிதம் கொள்வதுடன் நமது பொறுப்புகளையும் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் இப்போதிருந்தே நீங்களும், உங்களது பொறுப்பில் உள்ள மற்றவர்களும் 2026-ம் ஆண்டு காதியான் ஜல்ஸாவில் பங்கெடுக்க முழுமையான முயற்சி செய்ய வேண்டும்.

ஜல்ஸா நடைபெறும் அந்த நாட்களில் காதியானில் கடுமையான குளிர் நிலவும் என்பது அனைவரும் அறிந்த விஷயமாகும். இந்த அடிப்படையிலும் உகந்த ஆயத்தங்களை செய்து கொண்டு வர வேண்டும். மேலும் ஹுஸூர் (அலை) அவர்கள் வழங்கிய வழிகாட்டலின்படி, சிறு சிறு தொகையை இந்த நோக்கத்திற்காக சேமித்து வைத்து வரவேண்டும். அந்தத் தொகையானது பயணச் செலவிற்கும்,பயணத்தில் தேவைப்படும் பொருட்களை வாங்குவதற்கும் அவசியமாக இருக்கும்.

எனவே இறைக் கூற்றுகளை கேட்பதற்காகவும், துஆக்களில் பங்கெடுப்பதற்காகவும், குறிப்பாக ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் அவர்கள் ஆற்றும் அந்த (நிறைவு) உரை மற்றும் துஆவை விலைமதிப்பற்ற கருவூலமாக கருதி அதில் கலந்து கொள்வதற்காக இப்போதிருந்தே ஆயத்தமாக தொடங்கி விடுங்கள்!

வபில்லாஹி தவ்ஃபீக்!

தமிழாக்கம்
முரப்பி

A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *

## 1-ம் பக்கத் தொடர்ச்சி...... (தஃப்ஸீரே கபீர் )

வந்திருந்தால் ஸஹாபிகளில் இணைந்திருப்பார்கள். பிற்காலத்தில் அல்லாஹ் அவர்களின் தூய்மையைக் கண்டு ஜமாஅத்திலோ இணையச் செய்து விட்டான்; ஆனால், ஸஹாபிய்யத்திலிருந்து இழப்பிற்குரியவர்களாகி விட்டனர்.

எனவே ஜல்ஸாவின் நாட்களில் தென்படும் இதுவும் ஓர் அடையாளமாகும். அதாவது மக்கள் எந்த அளவு பெரும் எண்ணிக்கையில் இங்கு ஒன்றுகூடுகின்றனர் என்றால், அது ஒருபோதும் கற்பனையில் கூட நிகழ்ந்திருக்க முடியாது. அடுத்து இந்த அடையாளமும் வெளிப்படுகின்றது. அதாவது, எந்த மக்கள் அறிவீனர்களாக கருதப்பட்டு வந்தனரோ அவர்கள் இந்த நீரூற்றிலிருந்து எந்த அளவுக்கு ஆர்வத்துடன் பருகுகின்றார்கள் என்றால், மற்ற சமுதாயங்களின் தாகித்தவர்கள் கூட இப்படி பருக முடியாது.

காதியானில் வசிப்பவர்களை இறைவன் இந்த வீட்டின் பாதுகாப்பிற்கான வழிமுறையாக ஆக்கியுள்ளான். அதன் பரக்கத்திற்காக அது மக்களை ஒன்றுதிரட்டி இங்கு கொண்டு வருகிறது. எனவே இங்குள்ள ஜமாஅத் நண்பர்களுக்கு நான் அறிவுறுத்துவது என்னவென்றால், வரவிருக்கும் அந்த நாளுக்காக ஆயத்தமாகுங்கள். சொந்த வீடு உள்ளவர்கள் தங்களது வீடுகளை கொடுங்கள்; மேலும் இது மட்டுமின்றி, உங்களது உடல் உழைப்பையும், நேரத்தையும் சேவைக்காக அர்ப்பணித்து விடுங்கள். மேலும் பொறுப்பாளர்களாக இருப்பவர்களுக்கு நான் அறிவுறுத்துவது என்னவென்றால், நான் தொடர்ந்து கூறிவந்ததைப் போன்று ஊழியர்களுக்கு பணிக்கு முன்பு பயிற்சி பெறச் செய்யுங்கள்.'

(குத்பாதே மஹ்மூத், தொகுதி 12, பக்கம் 509-513)

* * * * * * * * * * *

## கண்ணியத்திற்குரிய பத்ர் வாரப் பத்திரிகை காதியான் வாசகர்களின் கவனத்திற்கு

காலத்தின் இமாம் மற்றும் ஹஸ்ரத் நபிகளின் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய பராமரிப்பில் இந்த பத்திரிகை முற்றிலும் வளர்ந்தாகும் என்ற பெருமையை பத்ர் பத்திரிகை பெற்றுள்ளது. தொடக்கம் முதல் இன்று வரை, முதலில் நபித்துவத்தின் கீழும், பின்னர் நபத்துவத்தின் வழியிலான கிலாஃபத்தின் நிழலிலும் இந்த பத்திரிகை தனது தஃப்லீக் மற்றும் தர்பிய்யத் பணிகளைத் தொடர்ந்து செய்து கொண்டு செல்கிறது. இந்த பத்திரிகையின் மூலம் பல நற்பேறு பெற்ற ஆன்மாக்கள் அஹ்மதிய்யத்தில் வந்து இணைந்துள்ளன. அஹ்மதிய்யா கிலாஃபத்தின் வழிகாட்டுதல்களின் ஒளியில், இந்த பத்திரிகையின் மூலம் அஹ்மதி குடும்பங்களுக்கு தர்பிய்யத் வழங்கப்பட்டு வருகிறது; இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்திலும் நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.

பத்திரிகைத் தயாரித்தல், அச்சிடுதல், பேக்கிங் செய்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றில் பெரும் செலவுகள் ஏற்படுகின்றன. குறைந்தபட்ச சந்தா தொகையைக் கொண்டு மட்டும் இச்செலவுகளை ஈடுகட்ட முடியாது. எனவே, காலத்தின் இமாமுடைய இந்த பத்திரிகையின் செலவுகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய சிறப்பு உதவியாளர்கள் மிக அதிகமாகத் தேவைப்படுகிறார்கள். இந்த பத்திரிகைக்கு நிதி உதவி செய்பவர்களின் உதவியை அல்லாஹ் ஒருபோதும் வீணாக்க மாட்டான். ஏனெனில் உமக்கு உதவுபவர்களுக்கு நான் உதவுவேன் என்பது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். உதவியாளர்களின் அனைத்து விவகாரங்களையும் அல்லாஹ்வே பாதுகாப்பான். மேலும் தனது வாக்குறுதியின்படி அவர்களின் தொழில், வேலைவாய்ப்பு, தோட்டம், விளைச்சல் மற்றும் செல்வத்தில் பல மடங்கு பரக்கத்தையும் தருவான். இன்ஷா அல்லாஹ்!

எந்தவொரு வழிகாட்டலுக்கும் பத்ர் வாராந்திரப் பத்திரிகையின் மேலாளர் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு எண்:
9815639670

* * * * * * * * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

12-ம் பக்கத் தொடர்ச்சி

## (ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவு)......

வைக்கவில்லையாயின், கோயில்களும், ஆலயங்களும், மடங்களும் அல்லாஹ்வின் பெயர் அதிகமாக நினைவு கூரப்படும் பள்ளிவாயில்களும் தரைமட்டமாக்கப்பட்டிருக்கும். மேலும் அல்லாஹ் அவனு(டைய மார்க்கத்து)க்கு உதவுபவர்களுக்கு நிச்சயமாக உதவுவான். நிச்சயமாக அல்லாஹ் சக்தி வாய்ந்தவனும், மிகைத்தோனும் ஆவான். (அல்-ஹஜ்:41)

இந்த வனம் தெளிவாக இந்த விஷயத்தை கூறுகின்றது: அதாவது, அல்லாஹ் தற்காப்புப் போருக்கான அனுமதி கொடுக்காமல் இருந்திருந்தால், பின்னர் எந்த மார்க்கமும் பாதுகாப்பாக இருந்திருக்காது; அதே போன்று எந்தவொரு வணக்க ஸ்தலமும், கோயிலும், யூதர்களின் ஆலயங்களும், அதே போன்று பள்ளிவாசல்களும் அபாயங்களிலிருந்து பாதுகாப்பானதாக இருந்திருக்காது. இன்னும் கூறப்போனால், எதிரிகள் அவற்றை அழித்திருப்பார்கள். மேலும், எந்த மார்க்கத்தின் அடையாளமும் எஞ்சியிருந்திருக்காது.

அல்லாஹ் கூறுகின்றான்: எவரையும் அவரது மார்க்கத்தின் காரணமாக இலக்காக்குவது ஒரு பயங்கரமான மற்றும் அபாயகரமான குற்றமாகும். மேலும், இந்த விஷயத்தை அவன் மிகவும் வெறுக்கின்றான். ஆக, இதன் காரணமாக சில குறிப்பிட்ட சூழல்களில் அப்படிப்பட்ட மக்களை வலிமையின் மூலமாக தடுப்பதை ஆகுமானதாக ஆக்கியிருக்கின்றான்.

இங்கு மற்றுமொரு விஷயமும் கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். அதாவது, நான் எந்த வசனத்தின் சான்றை முன்வைத்துள்ளேனோ அந்த வசனத்தில் அல்லாஹ் இந்த விஷயத்தை கூறவில்லை. அதாவது, மஸ்ஜிதுகளின் பாதுகாப்பிற்காக மட்டுமே வலிமையை பயன்படுத்த வேண்டும் என்று கூறவில்லை. மாறாக, ஏனைய மார்க்கங்களின் வணக்க ஸ்தலங்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் இறுதியில் மஸ்ஜிதுடைய பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே நான் ஒருமுறை மீண்டும் இந்த விஷயத்தை தெளிவுபடுத்தி விடுகிறேன். அதாவது நிராகரிப்பாளர்களுக்கு எதிராக போரிடுவதற்கு முஸ்லிம்களுக்கு அனுமதி நல்கப்பட்டபோது அது வெறும் இஸ்லாத்தின் தற்காப்பு மற்றும் இஸ்லாத்தின் பாதுகாப்பிற்காக மட்டுமே வழங்கப்படவில்லை. மாறாக, அதன் நோக்கம் அனைத்து மார்க்கங்கள் மற்றும் அனைத்து வணக்க ஸ்தலங்களையும் பாதுகாப்பதற்காக இருந்தது. மார்க்க சுதந்திரம் என்ற அடிப்படையில் முதலாவது சட்டத்தை திருக்குர்ஆன் தான் எடுத்துரைத்துள்ளது என்று கூறுவது ஒருவகையில் சரியானதாகும். வேறு சொற்களில், மஸ்ஜித் கட்டப்படும்போதெல்லாம் மார்க்க சுதந்திரத்திற்கான புதிய அத்தியாயம் திறக்கப்படுகின்றது. இது வெறும் மார்க்க சுதந்திரம் மட்டும் கிடையாது; மாறாக, அனைத்து மார்க்கங்களையும் பாதுகாப்பதற்காகன கட்டளையும் வழங்குகின்றது.

ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள்:

கனடா எந்த சில நாடுகளில் ஒன்றாக கணக்கிடப்படுகிறது என்றால், அநேகமாக இரண்டாவது அல்லது மூன்றாவது நாடாக இருக்கும். அந்த நாடு முறையாக மார்க்க சுதந்திரத்திற்காக ஓர் அலுவலகத்தை திறந்துள்ளது. என்னைப் பொருத்த வரை இந்த சிறந்த நடவடிக்கைக்காக கனடா அரசாங்கம் போற்றுதலுக்குரியதாக இருக்கின்றது. மேலும் வாழ்த்துகளுக்கு உரிமை படைத்ததாக இருக்கின்றது. இதனை நான் ஏன் கூறுகின்றேன் என்றால், கனடா நாட்டிற்குள்ளும், நாட்டிற்கு வெளியிலும் எப்படிப்பட்ட விஷயத்தை அடைவதற்கு முயற்சி செய்கின்றது என்றால், அதனால் பூமி மற்றும் வானத்தின் படைப்பாளன் மகிழ்ச்சியடைகின்றான்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

அஹ்மதி முஸ்லிம்களாகிய நாங்கள் இந்த விஷயத்தின் மீது நம்பிக்கை கொள்கிறோம்; அதாவது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் அவர்கள் இக்காலத்தின் இமாம் ஆவார்கள்; அன்னார் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளின் மறுமலர்ச்சிக்காக வந்துள்ளார்கள். இதன் காரணமாக எங்களின் வாதம் இதுவாகும். அதாவது, இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் அசல் போதனைகளின் படி அமல் செய்கின்ற அஹ்மதிகள் நாங்கள் ஆவோம்; நாங்கள் முழு உலகையும் இஸ்லாத்தின் சிறப்பான மற்றும் உயர்ந்த போதனைகளால் ஒளிபெறச் செய்வதற்கு சாத்தியமான எல்லா முயற்சிகளையும் நாங்கள் செய்கின்றோம்.

எனவே நாங்கள் கனடாவின் அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு முழுமையான ஆதரவு அளிக்கின்றோம். மேலும் உலகில் மார்க்க சுதந்திரத்தை நிலைபெறச் செய்வதற்காக அவர்களின் முயற்சிகளில் முழுமையான ஒத்துழைப்பை நாங்கள் அளிப்போம். எந்த விஷயத்தை நாங்கள் பிரச்சாரம் செய்கின்றோமோ அந்த விஷயத்தின் படி நாங்கள் அமல் செய்கின்றோம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. மேலும், மார்க்க சுதந்திரத்திற்கான அந்த அலுவலகத்தை எங்களது தலைமையகமான பீஸ் வில்லேஜ் டொரோன்டோவில் துவக்கப்பட்டிருப்பதைப் போன்று அதனை நாங்கள் செயல் வடிவில் வெளிப்படுத்தியும் இருக்கின்றோம்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நான் இதனையும் கூற விரும்புகின்றேன். அதாவது தற்போது நம்முடன் இருக்கின்ற DR. Andrio Bennett அவர்கள் அந்த துறைக்கான முதலாவது தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த நிகழ்ச்சிக்கு முன்னால் அன்னாருடன் எனது சந்திப்பு நிகழ்ந்தும் விட்டது. நாங்கள் ஒவ்வோர் ஆண்டும் நடத்துகின்ற லண்டனில் அமைதி கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக இவர்கள் வருகை தந்து கொண்டிருந்தார்கள். நான் கண்டுள்ளேன். இவர்கள் மிகவும் பரந்த உள்ளம் படைத்தவராகவும், நட்பை பேணுவதுடன் இந்த பொறுப்பை முழுமையான முறையில் நிறைவேற்றுவதற்காக முழு உத்வேகமும் முழுமையான உறுதியும் கொண்டிருக்கின்றார்கள். அல்லாஹ் இவர்களுடைய இந்த உறுதியை எப்போதும் நிலை நிறுத்துவானாக!

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

கனடா அரசாங்கமும், கனடா மக்களும் அல்லாஹ்விற்கு விருப்பமான அந்த அனைத்து செயல்களையும் மேற்கொள்ள வேண்டும் என்பது எனது பிரார்த்தனையும் ஆகும். மேலும் இந்த மகத்தான சமுதாயத்தின் மீது அல்லாஹ்வின் கருணைகளின் மழை பொழியும் பொருட்டு இவர்கள் அல்லாஹ்வின் கோபத்திற்கு காரணமாக அமைகின்ற அந்த செயல்களிலிருந்து தங்களை விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும் நான் பிரார்த்தனை செய்கின்றேன்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: தற்போது நான் மீண்டும் மஸ்ஜித் தொடர்பாக சில விஷயங்களை கூற விரும்புகின்றேன். நான் முன்னர் கூறியது போன்று, இந்த நகரம், இந்த பகுதி இன்னும் கூறப்போனால், முழு நாட்டு மக்களும் தங்களது உள்ளத்திலும், மூளையிலும் உருவாகக் கூடிய ஐயங்களையும், சந்தேகங்களையும் மற்றும் பதற்றத்தையும் முழுமையாக அகற்றிவிடுங்கள். இந்த மஸ்ஜித் குறித்து நீங்கள் அச்சப்படுவதற்கு எந்த அவசியமும் இல்லை. ஏனெனில், இந்த மஸ்ஜித் அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்திற்கான தூதுச் செய்தியை மட்டுமே வழங்குகின்றது. மேலும், இந்த மஸ்ஜித் அமைதி மற்றும் மத நல்லிணக்கத்திற்கான உத்திரவாதமாகும். இந்த மஸ்ஜிதிற்கு பைத்துர் ரஹ்மான் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. ரஹ்மான் என்ற சொல்லானது இறைவனின் பெயர்களின் ஒரு பெயராகும். மேலும் அவனது ஒரு பண்பாகும். இதன் பொருள் என்னவென்றால், அல்லாஹ் அனைத்து படைப்பினங்கள் மற்றும் அனைத்து சமுதாயங்களுக்கும் அப்பாற்பட்டு, அவர்கள் எந்த இனத்துடனும், மார்க்கத்துடனும் தொடர்புடையவர்களாக இருந்தாலும் சரி! அவர்களுக்கு அவன் பரிவு மிக்கவனும், மீண்டும், மீண்டும் கருணை காட்டுபவன் ஆவான். இன்று உலகியல் வணங்கிகள் உலகில் எங்கு மக்களின் பெரும்பான்மை அல்லாஹ்விற்குரிய உரிமைகளை வழங்குவதில்லையோ அங்கு இறைவன் தனது அனைத்து படைப்பினங்களுக்கும் அருளிக் கொண்டிருக்கின்றான். அல்லாஹ்வின் பண்புகளை மேற்கொள்ளும்படி முஸ்லிம்களுக்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது. ஆக, ஒரு உண்மையான முஸ்லிமிற்கு அல்லாஹ்வின் படைப்பினத்திற்காக பரிவும், கருணை உள்ளமும் கொண்டிருப்பதும் அவசியமாகும். பிறருக்கு துன்பம் மற்றும் வேதனை கொடுப்பதற்கு பகரமாக முஸ்லிம்கள் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஒரு முஸ்லிம் கருணை உள்ளம் மற்றும் பரிவின் மூலமாகவே இறைவனுடைய கருணைகள் மற்றும் அருட்களை ஈர்க்கக் கூடியவராக ஆக முடியும். ஒரு உண்மையான முஸ்லிம் பிறருக்கெதிராக அநீதியில் பங்கெடுப்பதும், குழப்பம் விளைவிப்பதும் சாத்தியமற்றதாகும். ஒரு உண்மையான முஸ்லிமிற்கு ஒரு மஸ்ஜிதை அச்சம் மற்றும் வெறுப்பின் இடமாக ஆக்கிவிடுவதும், மக்களை அதிலிருந்து விலக்கி வைப்பதும் சாத்தியமற்றதாகும். இன்னும் கூறப்போனால், இதற்கு எதிராக மஸ்ஜித் அல்லாஹ்வை வணங்குவதற்கான இடமாக இருக்கின்றது. மேலும், இது அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான தூதுச் செய்தியை வழங்குகின்றது. மஸ்ஜித் எப்படிப்பட்ட இடம் என்றால், அது காந்தத்தைப் போன்று மக்களை தன் பக்கம் ஈர்க்கின்றது.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: எனவே இந்த மஸ்ஜிதின் திறப்பு விழா சந்தர்ப்பத்தின்போது, நான் அறிவிக்கின்றேன்; அதாவது இந்த மஸ்ஜித் ஒருவர் அஹ்மதி ஆவார் அல்லது அஹ்மதி அல்லாதவர் ஆவார் அல்லது முஸ்லிம் ஆவார் என்பதற்கு அப்பாற்பட்டு அன்பு, அமைதி மற்றும் சகோதரத்துவத்தை பரப்புவதற்கான காரணியாக நிரூபணமாகும். அனைத்து மார்க்கங்களின் மக்களுக்காக நமது மஸ்ஜிதுடைய கதவுகள் திறந்திருக்கும். ஏனெனில், இந்த மஸ்ஜித் இறைவனின் மனிதகுலத்திற்காக ரஹ்மானிய்யத்தின் வெளிப்பாடாகும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நான் இதனையும் கூறிவிடுகின்றேன். அதாவது இந்த மஸ்ஜிதுடைய கட்டுமானத்துடன் அஹ்மதி முஸ்லிம்களுக்கு பரந்துபட்ட சமூகத்தில் பொறுப்புகளும் அதிகரித்து விடுகின்றது. உள்ளூர் அஹ்மதிகளுக்கு கோவில், தேவாலயம் மற்றும் வணக்க ஸ்தலங்களில் பாதுகாப்பதற்காக எப்போதும் தயாராக இருக்க வேண்டும். இன்ஷா அல்லாஹ் அஹ்மதி அல்லாதவர்கள் சுயமே இந்த விஷயத்தை நேரில் பார்ப்பார்கள். அதாவது அவர்கள் எப்போதெல்லாம் ஏதாவது ஒரு விஷயத்திற்கான தேவையோ அல்லது உதவியோ ஏற்படுமோ அப்போது அஹ்மதிகளே அவர்களுக்கு உதவி செய்வதற்காகவும், அனைத்து மக்களின் இறை வணக்க ஸ்தலங்களை பாதுகாப்பதற்காகவும் எல்லாரையும் விட முன்னணியில் இருப்பார்கள்.

நான் நம்புகின்றேன்; மேலும், நான் துஆ செய்கின்றேன். அதாவது, நான் இன்று கூறிய எனது கூற்றுகளின் மீது உங்களுக்கு உறுதியான நம்பிக்கை ஏற்பட்டு விடட்டுமாக! மேலும் உங்கள்

மீது இஸ்லாத்தின் அழகும், அதன் அழகிய போதனைகளும் வெளிப்பட்டு விடட்டுமாக! உண்மையில் இதுவே இஸ்லாம் ஆகும். இது அனைத்து மனிதகுலத்திற்கான ஒளிக்கதிராகும். மேலும், அதன்படி அஹ்மதிய்யா ஜமாஅத் செயல்பட்டு கொண்டிருக்கின்றது.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இன்றைய உலகத்திற்கு இந்த விஷயத்திற்கான கடும் தேவை இருக்கின்றது. அதாவது, எல்லா மார்க்கங்களையும் ஏற்றுக் கொண்டவர்களும்,எவர்களுக்கு மார்க்கத்தின் மீதான நம்பிக்கை இல்லையோ அவர்களும் ஒன்றுகூட வேண்டும். அனைத்து சமுதாயங்கள் மற்றும் இனங்களின் நோக்கத்திற்காக இந்த உலகை அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக ஒன்றுதிரள்வது மிகவும் அவசியமாகும். எங்கெல்லாம் அநீதியிழைக்கப்படுகின்றதோ அதனை அமைதியை விரும்பக் கூடிய மக்கள் அனைவரும் அதனை வலிமையுடன் தடுத்து நிறுத்துவதற்காக கண்டிப்பாக ஒன்றுதிரண்டே ஆக வேண்டும். ஒவ்வொருவரும் தமது உள்ளங்களிலிருந்து பகைமை, காழ்ப்புணர்ச்சி மற்றும் வெறுப்பை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். இல்லையென்றால் இந்த பகைமைகள் பிறீட்டு எழுந்து விடும். மேலும், உலகின் அழிவிற்கு காரணமாகி விடும். உலகப் போருக்கான அடையாளங்கள் தொடர்ந்து வானத்தில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், இந்தப் போரின் பேரழிவிற்குரிய விளைவுகளிலிருந்து தப்பிப்பதற்காக ஒரு வழிமுறை தான் இருக்கின்றது. அதாவது, தனது படைப்பினத்திற்காக ரஹ்மானாக இருக்கின்ற அந்த ஏக இறைவனிடம் துஆ செய்யப்பட வேண்டும். உலகம் அந்த இறைவனின் பக்கம் குனிந்து விட வேண்டும் என்பது எனது துஆ ஆகும்.

இறுதியில், நீங்கள் அனைவரும் நேரத்தை ஒதுக்கி எங்களுடைய இந்த மகிழ்ச்சியில் பங்கெடுத்ததற்காக ஒருமுறை மீண்டும் நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அல்லாஹ் உங்கள் மீது அருள் செய்வானாக! நன்றி!

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடைய இந்த சொற்பொழிவு ஒரு மணி பத்து நிமிடம் வரை தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருந்தது. ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சொற்பொழிவு நிறைவடைந்த உடன் அனைத்து விருந்தினர்களும் எழுந்து நின்று விட்டார்கள். மேலும் அதிக நேரம் வரை கைத்தட்டிக் கொண்டிருந்தார்கள்.

அதன் பிறகு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் துஆ செய்து வைத்தார்கள். துஆவிற்கு பிறகு அனைத்து விருந்தினர்களுக்கும் விருந்து பரிமாறப்பட்டது. உணவுக்குப் பிறகு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவுகூர்ந்து விருந்தினர்களை சந்தித்தார்கள். விருந்தினர்கள் ஒவ்வொருவராக ஹுஸுர் அன்வர் அவர்களிடம் வந்தார்கள் உரையாடினார்கள் ; மேலும் விண்ணப்பித்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு நபரும் ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை சந்திப்பதற்காக மிகவும் துடிப்புடன் இருந்தார்கள்.

இதன் பிறகு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 10.20 நிமிடத்தில் தமது அலுவலகத்திற்கு சென்று விட்டார்கள்.

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை, ஜுலை 19,2013)

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *

سیرت خاتم النبیین صلی اللہ علیہ وسلم

## ஸீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்கள்

**நூலாசிரியர்**
**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம். ஏ (ரலி)**

சுருங்கக் கூறின், அரேபியாவில் சிலை வழிபாட்டாளராக இருந்தாலும், யூதராக இருந்தாலும் அல்லது கிறிஸ்தவராக இருந்தாலும், அனைத்து ஒழுக்கம், பழக்கவழக்கங்கள் மற்றும் சமுதாய குணநலன்களின் அடிப்படையில் அனைவரும் ஒன்றுபோல் இருந்தனர். கொலை, கொள்ளை, சூதாட்டம், விபச்சாரம், மது அருந்துதல் ஆகியவற்றின் சந்தை சூடுபிடித்திருந்தது.

இதேபோல், சடங்குகளைப் பின்பற்றுவதும் அனைவரிடமும் பொதுவாக இருந்தது; மூடநம்பிக்கை எந்த அளவிற்கு இருந்ததென்றால், மதமும் அதற்கு முன்னால் ஒன்றுமற்றதாக இருந்தது. பலவிதமான விநோதமான சடங்குகள் நாட்டில் பரவியிருந்தன. உதாரணமாக, 'பில்அஸ்லாம்' (அம்புகள் மூலம் அதிர்ஷ்டம் கணித்தல்) எனும் சடங்கு இருந்தது. அதாவது, ஒரு பலியில் பத்து பேர் பங்கெடுப்பார்கள்; பின்னர் பங்குகளின் சமமான விநியோகத்தின் அடிப்படையில் அல்லாமல், பலிகளுக்கான அம்புகளின் மூலம் ஒரு வகையான சீட்டு குலுக்கல் நடத்தப்படும். யாருடைய அம்பு வருகிறதோ அவருக்குப் பங்கு கிடைக்கும், சில சமயங்களில் சிலர் வெறுங்கையோடு திரும்புவார்கள். ஒவ்வொரு அம்பின் பெயரும், அதன் தனிப் பங்கும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அம்புகள் மூலம் அதிர்ஷ்டம் பார்க்கும் வழக்கமும் பரவலாக இருந்தது. எந்த ஒரு காரியத்தைச் செய்வதற்கும் முன் அம்புகளைக் கொண்டு சகுனம் பார்த்து வந்தார்கள். கஃபாவிலும் அதிர்ஷ்ட அம்புகள் வைக்கப்பட்டிருந்தன; மேலும், அங்குச் சென்று மக்கள் சகுனம் பார்த்து வந்தனர். பறவைகளைப் பறக்கவிடுவதன் மூலமும் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு வந்தது.

ஒரு விநோதமான சடங்கு அரேபியாவின் சில கோத்திரங்களில் இருந்து வந்தது. அது என்னவென்றால், ஒருவர் ஏதேனும் பயண நோக்கத்துடன் வீட்டிலிருந்து புறப்பட்டு, வழிப்பாதையிலிருந்து ஏதேனும் ஒரு காரணத்தால் மீண்டும் (வீடு) திரும்ப நேரிட்டால், வாசல்கள் வழியாக வீட்டிற்குள் நுழைய மாட்டார்கள். மாறாக, வீட்டின் பின்புற வழியாகவே நுழைவார்கள். திருக்குர்ஆனிலும் இது குறித்து சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சில கோத்திரத்தாரிடம் இந்த விஷயம் வழக்கமாக இருந்தது. அதாவது, ஒரு நபர் இறந்துவிட்டால், பின்னர் அவரது ஒட்டகத்தை அவரது மண்ணறை பக்கம் கட்டிப்போட்டு விடுவார்கள்; எதுவரை என்றால், அது பசியாலும், தாகத்தாலும் இறந்துபோகும். பெண்களிடம் கடுமையாக ஒப்பாரி வைக்கும் பழக்கம் இருந்தது. பல ஆண்டுகள் வரை துக்கம் கடைபிடிக்கும் பழக்கம் இருந்து வந்தது.

பொதுவாக அரேபியப் பெண்கள் விலங்குகளின் பாலைக் கறக்க மாட்டார்கள்; அது வழக்கம் பெண்களுக்கு விநோதமானதாக கருதப்பட்டு வந்தது. ஒரு குடும்பத்தில் ஏதேனும் ஒரு பெண் அவ்வாறு செய்வதைப் பார்த்தால், அந்த குடும்பம் மற்றவர்களின் பார்வையில் தாழ்ந்துபோகும்.

விலங்குகளைச் சிலைகள் போன்றவற்றின் பெயரில் அல்லது ஒரு நேர்ந்து விடுதல் போன்றவற்றின் விளைவாக சுதந்திரமாக விடுவித்து விடுகின்ற ஒரு சடங்கு இருந்தது; இது தொடர்பாக நான்கு வகையான விலங்குகள் அதிகம் பிரபலமாக இருந்தன: முதலாவதாக, சாஇபா: தொடர்ந்து பத்து பெண் குட்டிகளை ஈன்றெடுத்த ஒட்டகம்; அத்தகைய ஒட்டகத்தின் மீது சவாரி செய்ய மாட்டார்கள். அதன் பாலை விருந்தினர்களைத் தவிர வேறு யாரும் பயன்படுத்துவதை ஹராமாக கருதப்பட்டது. மேலும் அதன் காதுகளும் அறுக்கப்படுவதில்லை. இரண்டாவது, பஹீரா: சாஇபா ஒட்டகத்தின் பதினோராவது குட்டியான பெண் குட்டி பஹீரா என்று அழைக்கப்பட்டு வந்தது. பஹீராவை அதன் காதை நடுவில் அறுத்து, அதன் தாயுடன் சுதந்திரமாக விட்டுவிடுவார்கள். மூன்றாவது ஹாம், எந்த ஆண் ஒட்டகம் மூலம் அடுத்தடுத்து பத்து குட்டிகள் பிறக்கிறதோ அது ஹாம் என்றழைக்கப்படுகிறது. அது காளையாக விடுவிக்கப்படும். நான்காவது, வஸீலா; தொடர்ந்து ஐந்து முறைகளில் தொடர்ந்து இரட்டைக் குட்டிகளாகப் பெண் குட்டிகளை ஈனும் ஆடு வஸீலா என்றழைக்கப்பட்டு வந்தது. இத்தகைய ஆட்டின் அடுத்தடுத்த குட்டிகளின் இறைச்சியை ஆண்கள் மட்டுமே உண்டு வந்தனர். பெண்களுக்கு ஹராம் (தடுக்கப்பட்டது) ஆக இருந்து வந்தது. இருப்பினும், அவற்றில் ஏதேனும் ஒரு குட்டி இறந்து பிறந்தால், அதன் இறைச்சியைப் பெண்களும் உண்டு கொள்ளலாம். திருக்குர்ஆனிலும் இந்த விலங்குகளைப் பற்றிய குறிப்பு வருகிறது.

திருமணம் தொடர்பாகவும் பல பல விநோதமான சடங்குகள் நடைமுறையில் இருந்தன. பொதுவாக நான்கு வகையான திருமண முறைகள் இருந்தன. அவற்றில் மிகவும் விசித்திரமான மற்றும், எல்லாவற்றையும் விட மிக அசுத்தமான வழிமுறை என்னவாக இருந்தது என்றால், ஒரு பெண்ணிடம் ஒரே நேரத்தில் பல ஆண்கள் சென்றடைந்து விடுவார்கள். மேலும், அங்கு ஒருவர் பின் ஒருவராக தன்னை இழிவுபடுத்திக் கொள்வர். மேலும், அந்தப் பெண் ஒரு குழந்தையை பெற்றெடுக்கும்போது, பின்னர் இந்த நபர்கள் மீண்டும் அவளிடம் ஒன்றுகூடுவர். மேலும், இந்தக் குழந்தை இவருடையது என்று எந்த ஆணைக் குறித்து அந்தப் பெண் கூறுவாளோ பின்னர் அந்தக் குழந்தை அவருடையதாக கருதப்பட்டு வந்தது. ஆனால், கண்ணியமிக்க நபர்களின் வாழ்க்கை இதுபோன்ற வெட்கக் கேடானவற்றிலிருந்து தூய்மையானதாக இருந்தது.

இந்த சில சடங்குங்கள் வெறும் உதாரணமாக எழுதப்பட்டுள்ளன. ஏனெனில், எல்லையற்ற சடங்குங்கள் அரேபியர்களிடத்தில் இருந்து வந்தன. பலப்பல விநோதமான சடங்குகள் உருவாகியிருந்தன. இஸ்லாம் அனைத்து அசுத்தமான சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் ஒரேடியாக ரத்து செய்து விட்டது.

**(தொடரும்.......)**

(ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 59 - 63, காதியான் பதிப்பு 2006-ம் ஆண்டு)

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *

திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் நினைவிலேயே
உள்ளங்கள் அமைதி அடைகின்றன
(13:29)

A. Khaleel Ahmad
( Melapalayam)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 08 OCTOBER 2026 Issue No. 41

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்களின் கனடா சுற்றுப் பயணம் - 2013

(அறிக்கை : அப்துல் மாஜித் ஸாஹிப் தாஹிர்)

**மஸ்ஜித் பைத்துர் ரஹ்மான் (பிரிட்டிஷ் கொலம்பியா, கனடா) திறப்பு விழாவின் போது ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆற்றிய உரையின் தொடர்ச்சி**

**(பாகம் - 2)**

**மே 18,2013**

**(சென்ற இதழின் தொடர்ச்சி.......)**

உண்மையான வரலாறு தெரியாததால் அவர்கள் அனைவரும் இதனை செய்கிறார்கள்.

அவர்களுக்கு உண்மையான இஸ்லாம் மற்றும் கறைபடியாத போதனைகள் பற்றித் தெரியாமல் இருப்பதே அதற்கான காரணம் ஆகும். முஸ்லிம்களில் சில பிரிவினரின் கொடூரமான செயல்களின் விளைவே இத்தகைய வெறுப்பிற்கும் மற்றும் கவலைக்குரிய நிலைமைகளுக்கும் காரணமாக அமைந்தது என்பதில் சிறிதும் சந்தேகம் கிடையாது. பெயர் தாங்கி முஸ்லிம்கள் உண்மையான போதனைகள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்வை விட்டும் மிகத் தொலைவில் சென்று விட்டார்கள். இதன் காரணமாகவே அவர்கள் இத்தகைய செயல்களை செய்து வருகிறார்கள். நஜ்ரானிலிருந்து வந்த கிறிஸ்தவ குழுவினருக்கு செய்யப்பட்ட ஏற்பாடு மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கருணை உள்ளத்தின் உதாரணத்தை நான் எடுத்து வைத்துள்ளேன். நான் இப்போது உங்களுக்கு முன்னால் அமைதிக்கான திருக்குர்ஆனின் போதனையை எடுத்து வைப்பேன்.

சூரா பக்கராவின் வசனம் 115-ல் இறைவன் கூறுகின்றான்:

அல்லாஹ்வின் பள்ளிகளில் அவனுடைய பெயர் கூறப்படுவதைத் தடுத்து, அவற்றைப் பாழாக்க முயல்பவனை விட மிகப் பெரிய அநியாயக்காரன் எவன்? (2:115)

ஓர் உண்மையான மஸ்ஜிதுடைய வாசல்கள் இறைவணக்கம் செய்ய விரும்புகின்ற மக்களுக்காக எப்போதும் திறந்திருக்கும் என்பது தெளிவான ஒரு கட்டளையாகும். எனவே ஓர் உண்மையான நம்பிக்கையாளர் எவரையும் இறைவனை வணங்குவதிலிருந்து தடுக்கின்ற அளவிலான அநீதியை ஒருபோதும் செய்ய முடியாது. இஸ்லாத்தின் மகத்தான போதனைகளை ஆய்வு செய்தால் பின்னர் அதன் பல்வேறு அம்சங்களிலிருந்து எப்போதும் ஒளியும், பிரகாசமுமே வெளிப்படும். இஸ்லாத்தின் அசல் மற்றும் அழகிய போதனைகளை அறிந்திராத மக்களுக்கு நான் இஸ்லாமிய போதனைகளை அறிமுகம் செய்யும்போது அவர்கள் உண்மையை அறிந்து ஆச்சரியத்தில் உறைந்து விடுகின்றனர். நான் ஏற்கனவே கூறியது போன்று, துரதிஷ்டவசமாக, முஸ்லிம்களின் ஒரு பிரிவினர் எத்தகையவர்களாக இருக்கின்றனர் என்றால் அவர்கள் தங்களது ஒன்றுபட்ட தவறான அமல்களின் காரணமாக இஸ்லாத்தின் மகத்துவம், மற்றும் அழகை பரப்புவதற்கு பகரமாக அது தொடர்பாக சந்தேகத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர்: மேலும் அவர்கள் செய்பவை எல்லாம் வெட்கத்திற்குரியவையாகும் என்பதிலும் எவ்வித ஐயமும் இல்லை. இஸ்லாமியப் போதனைகளிலோ அன்பும், நேசமும், அமைதியும் இருக்கின்றது. இது வெறும் சொற்கள் அல்ல. மாறாக, ஓர் உண்மைத்துவம் ஆகும். எந்த மக்கள் தமது தீய செயல்களின் மூலமாக இஸ்லாத்தின் பெயரை கெடுக்கின்றனரோ அவர்கள் சுயநலன்கள் மற்றும் சுயநோக்கங்களுக்காக மட்டுமே அவ்வாறு செய்கின்றனர். தீவிரவாதத்துடனும், பயங்கரவாதத்துடனும் இஸ்லாத்திற்கு உறுதியாக எந்த தொடர்பும் இல்லை.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

எங்கெல்லாம் திருக்குர்ஆனில் கடுமைக்கான போதனை வழங்கப்பட்டுள்ளதோ அதற்கான அவசியமும், காரணங்களும் கூட விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டுவிட்டன. எங்கெல்லாம் அப்படிப்பட்ட கட்டளைகள் வழங்கப்பட்டிருக்கின்றனவோ அவை உலகில் நிரந்தரமான அமைதியை நிலைநாட்டுவதற்கான வழிமுறைகளாக மட்டுமே அமைந்துள்ளன.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

திருக்குர்ஆனில் சூரா அல் ஹஜ்ஜில் வசனம் 40-ல் இவ்வாறு வருகிறது:

எதிரிகள் செய்த அநீதிகள் மற்றும் அக்கிரமங்களின் அடிப்படையில் முஸ்லிம்கள் தங்களை தற்காத்துக் கொள்வதற்காக போர் புரிவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆக, அல்லாஹ் கூறுகின்றான்:

எந்த மக்களுக்கு எதிராக போர் திணிக்கப்பட்டதோ அவர்களுக்கு (போருக்கான) அனுமதி வழங்கப்படுகின்றது. ஏனெனில், அவர்கள் மீது அநீதியிழைக்கப்பட்டுள்ளது. நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவி புரிவதற்கு வல்லமை படைத்துள்ளான்.

இந்த அனுமதிக்கான பின்னணி மற்றும் அந்த காலத்து நிலைமைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் அமைதியை நிலைநாட்டுவதற்கு எல்லா முயற்சிகளும் செய்தனர். மேலும் எல்லா வகையான தியாகங்களும் செய்தனர். முஸ்லிம்கள் உச்சபட்ச அநீதி மற்றும் அக்கிரமங்களை மட்டும் சகித்துக் கொள்ளவில்லை. மாறாக, அவர்களுக்கு எதிராக போருக்கான அறிவிப்பும் செய்யப்பட்டது. மேலும் அவர்களின் வீடுகளிலிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

சுருக்கமாக, இஸ்லாத்தின் எதிரிகளின் அநீதிகளும், அக்கிரமங்களும் எல்லா ரீதியிலும் எல்லையை கடந்து சென்று விட்டிருந்தது. அல்லாஹ் தற்காப்புப் போருக்கான அனுமதி வழங்கப்பட்ட அந்த தருணம் மிகவும் முக்கிய தருணமாக இருந்தது. மேலும் அத்துடன் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு உதவிக்கான வாக்குறுதியும் வழங்கியிருந்தான். உலகியில் ரீதியாக எதிர் தரப்பிற்கு எதிரில் முஸ்லிம்கள் மிகவும் பலவீனர்களாகவும், ஆதரவற்றவர்களாகவும், உதவியற்றவர்களாகவும் இருந்தனர். ஆனால், இந்த உண்மைத்துவத்திற்கு மத்தியில் எல்லா வல்லமைகளுக்கும் அதிபதியான அல்லாஹ் முஸ்லிம்களுடன் உதவி மற்றும் வெற்றிக்கான வாக்குறுதி வழங்கியிருந்தான். அவ்வாறே நிகழ்ந்தது என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது. மக்கத்து காஃபிர்களிடம் ஒரு வலிமை வாய்ந்த, முறையான இராணுவம் இருந்தது. அது போதுமான போர் தளவாடங்களால் முழுமையாக நிறைந்திருந்தது. முஸ்லிம் இராணுவத்தின் எண்ணிக்கையில் எதிரிகளின் மூன்றில் ஒரு பங்காகவே இருந்தது. அவர்களிலும் கூட அநேகமாக ஒரு சிலரிடம் மட்டுமே ஏதாவது போர்த் தளவாடங்கள் இருந்தன. இவ்வளவு மாபெரும் வித்தியாசம் இருந்தபோதிலும் முஸ்லிம்கள் எதிரிகளை ஓர் அற்புதமான முறையில் தோல்வியுறச் செய்து விட்டார்கள். ஏனெனில், அவர்கள் உண்மைக்காக போர் புரிந்து கொண்டிருந்தனர். மேலும், அமைதியின்மை மற்றும் அநீதிக்கு முடிவு கட்டுவதற்காக போர் புரிந்தனர். எனவே முஸ்லிம்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேலும் அல்லாஹ்வின் உதவியும் அவர்களுடன் இருந்தது.

இதன் அடுத்த வசனத்தில், அல்லாஹ் மிகவும் தெளிவாக இதனை எடுத்துரைத்து விட்டான்; அதாவது, ஒருவேளை இந்த அநீதிக்கு முடிவு கட்டவில்லையென்றால் பின்னர் ஒவ்வொரு மார்க்கமும் அநீதி மற்றும் அக்கிரமத்திற்கு இரையாகி விடும்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:

எங்களின் இறைவன் அல்லாஹ் என்று கூறியதற்காக மட்டும், அநியாயமாக அவர்களின் வீடுகளிலிருந்து விரட்டப்பட்டவர்களுக்கும் (போரிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது). மேலும் அல்லாஹ் சில மனிதர்களுக்கு மற்றவர்களைக் கொண்டு பதிலடி கொடுக்க

இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம்....

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad